
உ

# அருள் ஒளி



அமரர் வி. கயிலாசபிள்ளை

அமரர் காந்தி ஐயா


வெளியீடு

122

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை - 2017

# ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் தென்திசை வாயில்
# கோபுர கும்பாபிஷேக காட்சிகள் : 9-02-2017









# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

மாசி - பங்குனி மாத மலர்

2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587

ISBN 978 - 955 - 23 - 0019-3


## பொதுமக்களின் நிலங்களை கையளிப்பதே தர்மம்

இலங்கையில் நடைபெற்ற போரின் விளைவாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் பலரின் வீடுகள் வளவுகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டது அனைவரும் அறிந்ததே. போர் ஓய்ந்து 7 ஆண்டுகள் கழிந்தபின் பொதுமக்களின் சொந்த நிலங்களை, வீடுகளை கையளியாது காலந்தாழ்த்துவது தர்மமற்ற செயலாகும். காங்கேசன்துறை கீரிமலை, மயிலிட்டி போன்ற பிரசித்தமான ஊர்களின் முக்கிய பகுதிகள் முழுமையாக மக்களிடம் கையளிக்கவில்லை. ஆனைக்கோட்டையில் அப்பாவி மக்களின் இல்லங்களில் முகாம் தொடர்ந்து செயற்படுவதால் அப்பகுதி மக்களும் தொடர்ந்து அலைந்துகொண்டிருக்கிறார்கள். பளை, இயக்கச்சி முதல் வன்னிப்பகுதியில் பல பொதுமக்களின் வாழ்வாதார நிலங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் படும் அவலங்கள் அனைவரும் அறிந்ததே.

இவ்விடயம் தொடர்பாக அனைவரும் ஒன்றுபட்டு கௌரவ ஜனாதிபதியுடன் உரையாடி இப்பிரச்சினையைத் தீர்த்தல் காலத்தின் கட்டாயமாகும். சீரான சமாதானத்தை நோக்கி அனைவரும் செல்வதற்கு இத்தகைய தர்மமற்ற செயல்கள் நற்சூழலை என்றும் தோற்றுவிக்காது என்பது பூரண உண்மை. எமது அமைதியையும் சமாதானத்தையும்

விரும்புவர்கள் மக்களின் நீதியான துயர்களைத் தீர்த்துவைத்தல் அவசியமாகும். அரசியல் வாதிகள், கற்றோர், ஆன்மீகப் பெரியவர்கள் நல்ல அணுகுமுறையில் பொதுமக்களின் நிலங்களை மீளப்பெறும் விடயத்தில் விரைந்து செயற்படாவிட்டால் வீணான விபரீதங்களும் அச்சமான சூழலும் தோற்ற வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

நெற்றி வியர்வை சிந்தி உழைத்த மக்கள் அகதிகளாக அலைந்து திரிவதை எந்தக் கடவுளும் ஏற்கமாட்டார். 21ம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் மனிதாபிமானம் பற்றிய உரிமைவாத மாநாடுகள் தினமும் நடைபெற்றுவந்தாலும் எம்மண்ணில் நீதி நிலைப்பதாக இல்லை. கண்ணுக்கு முன்னால் தம் வீடு வளவு உள்ள போதும் கண்ணீரோடு தெருக்களில் நின்று அல்லலுறும் மக்களுக்கு தெய்வங்கள் தான் விடிவு கொடுக்கவேண்டும். உண்மை என்றும் உறங்காது. இறையருளால் நல்லதோர் விடிவு விரைவில் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

**– ஆசிரியர்**


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

கலாநிதி ஆறு. திருமுருகன்
021 - 222 6550

கண் வைத்திய நிபுணர்
Dr. ச. குகதாசன்
021 - 222 3645

# சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம்

**[ பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் ]**

சமயம், மூன்று பகுதிகளையுடையது. அவை: தத்துவங்கள், கிரியைகள், அனுபவம் என்பன. உள்ளத்திற் படிமுறையான அன்பு முதிர்ச்சியேற்பட்டு இறையனுபவமாக விளைவதே சமய வாழ்வின் முடிந்த குறிக்கோளாகும். இறையனுபவமாகிய கடவுள் காட்சியை எய்துவதற்கு மனத்தூய்மை இன்றியமையாதது. கண்ணாடியில் ஒரு பொருளைப் பார்ப்பதற்குக் கண்ணாடி மிகப் பரிசுத்தமாயிருக்க வேண்டியது போல, உள்ளத்திற் பரம்பொருளைக் காண்பதற்கு உள்ளம் மிகப் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்.

**தத்துவங்கள்**

உள்ளத் தூய்மையாலும், கடவுட் காட்சியாலும் அனுபூதிமான்களாற் கண்டறியப்பட்ட உண்மைகளே சமய தத்துவங்கள். சமயத் தத்துவங்களைப் பற்றிய உணர்வு வலியுறவும், நடைமுறை வாழ்க்கையானது அவ்வுணர்வின் வழிபட்டுச் செம்மையுடன் மிளிரவும், உள்ளத்தின் அழுக்கைப் போக்கவும் உபகாரமாயிருப்பன கருமங்கள். கருமங்கள் கிரியைகள் எனவும் படும். சமய அறிவும் சமயக் கிரியைகளும் இலட்சியங்களல்ல, கருவிகளே, இவற்றின்மூலம் உள்ளத் தூய்மை பெற்று, கடவுட் காட்சியை எய்துதலே இலட்சியமாகும்.

உலகிலுள்ள எல்லா மதங்களும், தத்துவங்களையும், கிரியைகளையும் அனுபவங்களையும் பெற்றிருக்கின்றன எனினும், சைவ சமயத்தில் நாம் இவற்றைத் தெளிவாகவும், சிறப்பாகவும் பெற்றிருக்கின்றோமென்பதற்கையமில்லை.

**கிரியைகள்**

அனுபூதிமான்களால் அலசியாராய்ந்து வடித்துத் தரப்பட்ட சிறந்த தத்துவஞானம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நவீன விஞ்ஞானிகளுங் கேட்டு வியப்படையத்தக்க உண்மைக் கொள்கைகள் சைவ சித்தாந்தமாக மலர்ந்துள்ளன. தமிழகத்தின் பேரரசர்களும் பெருமக்களும்ஏராளமான திருக்கோயில்களையமைத்துத் தந்திருக்கிறார்கள். திருக்கோயில்களிலும் ஏனைய இடங்களிலும் சமயத்தின் பெயரால் நடைபெறும் கிரியைகள் எண்ணிறந்தன. பிறந்த நாள் முதல் இறக்கு நாள் வரை நாம்பலவித கிரியைகளுக்கு உட்படுத்தப்படுகின்றோம். இவையனைத்துக்கும் மேலாக, அரும்பெரும் முது சொத்துக்களான திருமுறைகள் நமக்குக் கிடைத்தன. அருளாளர்கள் தாம் பெற இறையனுபவ முதிர்ச்சியை அவற்றின் மூலம் வெளிப்படுத்தினார்கள். நெஞ்சுருகி என்புருக்கும் இனிமை வாய்ந்த திருமுறைகளைப் படித்து அன்பினை வளர்க்கும் வாய்ப்பு நமக்குண்டு.

தத்துவங்களையும் கிரியைகளையும், மந்திரங்களையும் அருள் வாக்குகளையும் கோயில்களையும் தீர்த்தங்களையும் அன்றாடம் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்ற நாம், அவற்றை முறைப்படி பயன்படுத்துகின்றோமா? அவற்றைப் பயன்படுத்தியதன் மூலம் நமது உள்ளத்திற் சிறிதேனும் அசைவுண்டாயிற்றா? கல்நெஞ்சம் சிறிதாவது கனிந்துள்ளதா? அக்கனிவு நடத்தையிலும் பேச்சிலும் வெளிப்படுகின்றதா? என்ற வினாக்கள் பிரதானவை; நம்மை நாமே கேட்கவேண்டியவை. இவற்றுக்குத் திருப்திகரமான பதில் கிடைக்கும் பொழுதுதான் நமது சமய வாழ்வு வளர்ச்சியுறுகின்றதென்பது கருத்து.

**இலகுவான வழி**

திருமுருகாற்றுப்படையில் ஓரழகிய பகுதியுண்டு. முருகப் பெருமானையடைய வேண்டுமென்ற அவாவுடன் சென்ற ஓரடியாரை, அப்பெருமானிடம் ஆற்றுப்படுத்தினார் ஆசிரியர்.

“சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு
நலம்புரி கொள்கைப் புலம் புரிந்துறையுஞ்
செலவு நீ நயத்தினையாயிற் பலவுடன்,
நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே“

என்னும் பகுதியில்

முருகப் பெருமானையடைவதற்குரிய சுலபமான வழியை அவர் விளக்குகின்றார். “முருகனையடைய வேண்டுமாயின், அவனுடைய சேவடிகளிற் பொருந்தியிருந்து அவனையே தியானிக்குந் தலைமைப்பாடுடைய உள்ளம் வேண்டும்; பல பிறவிகளில் நன்மையே செய்துவந்த காரணத்தால், ஞானத்தை விரும்பிப், புலன்களை வென்று அவன் திருவடிக்கீழ்ச் சென்று வாழும் வாழ்வே பெருவாழ்வென எண்ணி அதனை நயத்தல் வேண்டும்; அங்ஙனம் நயக்கும் நீ அப்பேற்றையடைதல் கடினமென்றஞ்சாதே; பல உடன் நன்னர் நெஞ்சத்து“ அஃதாவது பலவாய அழுக்குகளை வெறுத்தொதுக்கிய நல்ல சுத்தமான மனத்தின் கண்ணே இனிய விருப்பத்தை மேற்கொண்டால் அவ்விருப்பம் நன்கு நிறைவேறும்; நல்ல நெஞ்சம் வாய்த்து, அதில் இனிய விருப்பமுஞ் சேர்ந்துவிட்டால், நீ கருதிய முருகனுடைய திருவடியை இக்கணமே அடைந்துவிடுவாய்” என்பது நக்கீரர் பெருமானின் கூற்று. முருகப் பெருமானையடைவதற்குரிய தகுதி, “நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்த்தல்“ என்ற கருத்து சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம், உள்ளத்தைத் தூய்மை செய்தலே என்பதை வலியுறுத்துகின்றது.

மேலும் மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில், “சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை” என்றதும் சிந்திக்கத்தக்கது. சித்தத்தில் அழகுடையவர்,

மனத்தின்கண் அன்புத் தூய்மையுடையோர், நமது சிவனைப் பாடாமலிருப்பார்களா என்பது, அழகிய சித்தத்தில் சிவ வெளிப்பாடு தானேயுண்டாகுமென்பதை விளக்குகின்றது. மனத்துக் கண் மாசினையகற்றாது, தத்துவஞான நூல்களைப் படிப்பதாலோ கிரியைகளைச் செய்வதாலோ பெரும் பயனுண்டாகாது. இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை, அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில்

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீர பிற" என்று கூறினார்.

ஒருவன் தன் மனத்தின் கண் மாசில்லாதவனாயிருக்கக் கடவன். அதுவே அறமாவது மனமாக நீங்காது செய்யும் பிற செயல்களெல்லாம் வெறும் ஆரவார நீர்மையை உடையனவே என்பது வள்ளுவர் கருத்து. ஒருவர் செய்யும் கருமங்களின் பெருமை, அக் கருமங்களின் நீள,அகல ஆழங்களிலிருந்து கணிக்கப்படமாட்டாது. அக்கருமத்தை அவர் எப்படிப்பட்ட நோக்குடன் செய்கின்றார் என்பதிலிருந்தே கணிக்கப்படும். தக்கன், இராவணன், சூரன் ஆகியோர்பெரிய கல்விமான்களாயும், பலசாலிகளாயும், சிறந்த கருமவீரர்களாயும் இருந்த போதிலும், மனத்தூய்மையின்றி அகந்தையுடன் அவர்கள் செயலாற்றியதால் அவர்களின் செயல்கள் இறைவனுக்குகந்ததாயிருக்கவில்லை.

**செம்மனச்செல்வி**

பாண்டி நாட்டிலே வாழ்ந்த வந்தியென்னுந் தவமூதாட்டி, இறைவனைத் தனக்குக் கூலியாளராய் எழுந்தருளிவரச் செய்தவர். இறைவனுக்குப் பிட்டினையிட்ட பாக்கியம் பெற்றவர். "பிட்டிடும் நற்றவமுடையாள்" எனத்திருவாதவூரரால் புகழப் பெற்றவர். இத்தனை பெருமைக்கும்அவரிடமிருந்த தகுதி "செம்மனச் செல்வி" யாக இருந்தமையே. கூலியாளராக வந்தவர் சிவபெருமானே என்பதை அவர் சிறிதும் அறியார். எனினும், அணையையடைப்பதற்காக, எளிமையான தோற்றத்துடன் வந்த அக்கூலியாளரைக் கண்டதும், தம்மகனைக் கண்டவர் போல் மனங்குழைந்து, வேலைக்குச் செல்லுமுன்னே வயிறார உண்ணும்படி உதிர்ந்த பிட்டு முழுவதையும் கொடுத்துப் பக்தி சிரத்தையுடன் அனுப்பினார். இறைவன்திருவருளாற் பிட்டு முழுவதும் உதிர்ந்து போகவும், தமது வாணிகத்துக்கு நட்டம் வந்ததே என்று சிறிதுஞ் சஞ்சலப்படாது, கூலியாளரை மகிழ்வுடன் உண்பித்தார். "தாயுமிலி, தந்தையிலி, தான் தமியன்" ஆகிய இறைவன், தாயன்பைப் பருகுவதற்கு வந்த குழந்தைபோல் நடித்து, அணைகட்டாது விளையாடிய பொழுதும் அவர் சிறிதேனும் வெறுப்புக் கொள்ளவில்லை. இங்ஙனஞ் செம்மை வாய்ந்த தூய மனத்தையுடையமையால் அவ்வம்மையார் இறைவன் திருவருளுக்காளாயினார்.

**பூசலார் நாயனார்**

பூசலார் நாயனார் ஏழ்மை காரணமாக இறைவனுக்குக் கற் கோயிலெடுக்க முடியாமல் வருந்தினார். பின்னர், மெய்யன்போடு ஆகமவிதிப்படி ஒரு கோயிலை மனத்திற் கட்டினார். ஆக்கோயிலில் எம் பெருமானை எழுந்தருளச் செய்வதற்கு

முகூர்த்தமும் வைத்தார். சோழப்பேரரசரொருவர், கற்கோயிலொன்றைப் பெருஞ் செலவிற் கட்டி, அங்கு இறைவனைப் பிரதிட்டை செய்வதற்கு, பூசலார் குறித்த அதே நாளையே குறித்தார். அன்றிரவு, இறைவன் அரசருடைய கனவிற்றோன்றி, முகூர்த்தநாளைத் தள்ளிவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

நின்றவூர்ப் பூசலன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடாயலத்து நாளை நாம்புகுவோம் நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை யொழிந்து பின் கொள்வாயென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்.

என்பது சேக்கிழார் திருவாக்கு. மன்னன் அன்புடன் கட்டிய பெருங்கோயிலுக்கு மேலாக, பூசலார் நாயனாரின் மனக்கோயிலுக்கு இறைவன் முதன்மையளித்தமை, அவர் மனத்தின் பெருந்தூய்மையும், அன்புங் கருதியாகும். ஒருவன் தன் பொருளில் எவ்வளவு தொகையைச் செலவிடுகின்றான் என்பதைவிட தன்மனத்தின் எவ்வளவு பகுதியை இறைவனுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறான், அவன் எழுந்தருளியிருக்கத் தகுதியாக்குகின்றான் என்பதே பெரியதாகும்.

**வீட்டின் விழுப்பம்**

நம் சமய நூல்களையாராய்ந்து பார்த்தால், துன்பமென்பதும் வீடென்பதும், மனநிலையைப் பொறுத்தே பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

“ஆணவத்தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந் நாளோ”

என்னுந் திருப்பாடலில், உள்ளத்தைத் தூய்மை செய்வதிலேற்படும் புரட்சிகரமான ஒரு மாறுதலே முக்திக்குக் காரணமாகின்றதெனத் தாயுமானவர் வற்புறுத்தினார். உயிரானது ஆணவ அழுக்குடன் இரண்டறக் கலந்து நிற்கும் மனநிலையை மாற்றி, மெய்ஞ்ஞான ஒளிப்பிளம்பாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுமானால் அதுவே வீடாகும். தீரர்கள் மிக விரைவில் மனத்தூய்மையைச் சாதித்து வீடுபெற்றுவிட, கோழைகள் கோடானு கோடி பிறவியெடுத்து உழல்வார்கள்.

அன்பும் நீதியுங்கூடிய சாந்தநிலை, பகைமையையும் வெறுப்புணர்ச்சியையும் வென்ற வீரம், கோபத்தையும் உலோபத்தையும் கடந்த பெருமை என்பன மனத்தூய்மையின் சின்னங்களாம். சுமய வாழ்வில் முன்னேறி இறைவனை நோக்கிநடை போடுகின்ற அன்பர்களுக்கு இவைகளே அடையாளங்கள். இப்பண்புகளை வளர்த்துவரும் மகான்கள் இறைவனின் தொடர்பை நேரிற் பெறுவர்.

அவர்களுக்கே இறைவன் மென்மேலும், சந்தர்ப்பங்களைக் கொடுத்துப் பரிசோதனை செய்கின்றான். கணிதத்திலே தீரனான மாணவனொருவனுக்குக் கடினமான கணக்குகளை மேன்மேலும் கொடுத்துப் பரீட்சிக்கும் கணித

ஆசிரியனைப்போல, இறைவனும் தன்னடியவரின் மனத்தூய்மையைப் பரீட்சிப்பான். இச்சோதனையாற் சாதனையாளன் தனியனாக்கப்படலாம்; ஏழையாக்கப்படலாம்; உறுப்பிலியாக்கப்படலாம். உலகோர் பார்வைக்கு அவன் தோல்வியடைந்தவன் போற்றோன்றலாம். ஆனால் அவனுடைய ஆன்மா வெற்றியீட்டி வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. இவ்வெற்றியே சமயத்தின் வெற்றி. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சமயம் வெற்றிபெற, நீதி வெற்றிபெற, திருவருள் வெற்றிபெற வழிகாணுதல் வேண்டும்.

**உளத்தூய்மை**

சைவப் பெருவாழ்வு வாழ்ந்த அருளாளர்களின் சரிதைகளைக் கூறவந்த சேக்கிழார் பெருமான், அவர்கள் வரலாறு கூறுமுன், மனத்தூய்மையோடு கூடிய நீதி வாழ்வென்று காட்டுதற்குப் போலும்,திருநாட்டுச் சிறப்புக்கூறிப் பின்னர் திருநகரமாகிய திருவாரூர்ச் சிறப்புக்கூறும் பொழுது திருவாரூரையாண்ட நீதிமன்னராகிய மனுநீதிகண்ட சோழரின் திருவுள்ளத் தூய்மையைத் தித்திக்கும் திருப்பாடல்களிற் தெளித்துத் தந்தனர். மன்னரது திருவுள்ளச் சிறப்பும், அத்திருவுள்ளத்தைத் தம் சிந்தையிலே சிந்தித்த சேக்கிழார் பெருமானின் சிறப்புஞ் சிந்திக்கற்பாலன.

அரச நீதியை மனிதகுல ஒருமைப்பாட்டில் மாத்திரமன்றி, ஆன்ம வர்க்கமுழுவதிலும் வைத்துச் சாதித்தவர் மனுநீதிகண்ட சோழர். தம்முயிர்போல் மன்னுயிரெல்லாவற்றையும் மதித்துப் போற்றிக் காத்துவந்த அவருள்ளத்தில் தாம் – பிறர், தம்முடையர் – பிறருடையவர் என்ற வேறுபாடோ, பேதவுணர்ச்சியோ நடுக்கமோ கிடையாது. செம்பொன்னை நிறுக்கும் தராசின் நாக்கைப்போல அவர் உள்ளமும் நேர்மையாகவே சிந்தித்தது. அம்மன்னரின் மகன், தேரிலேறித் திருவாரூர் மணிவீதியில் வந்தான். அரச குமாரனோ, அவனைச் சூழ்ந்து வந்த மக்களோ தன்னைக் காணாதவகையில் ஒரு ஆண் கன்று புனிற்றிளங்கன்று துள்ளிக் கொண்டே அவ்வீதியில் வந்தது.

அக்காட்சியை அகக்கண்ணாற் பார்த்தார் சேக்கிழார் பெருமான். ஆங்கு வந்தது சாதாரண பசுக்கன்றாகவே அவருக்குத் தோற்றவில்லை. ஒப்பற்ற பெரிய தருமதேவதையானது, சிறிதேனுமிரக்கமின்றி, மனுநீதி கண்ட சோழரின் நடுக்கமற்ற, செம்மையான உள்ளப்பாங்கினைச் சோதனை செய்வதற்கு, உருவந்தாங்கி வெளிவந்தது போன்று அக்கன்று காட்சியளித்தது.

தனிப்பெருந் தருமந்தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில் சிந்தையினிலுண்மைப் பான்மை சோதித்தாலென்ன
மனித்தர் தன்வரவு காணா வண்ணமோர் வண்ண நல்லான்

புனிற்றிளங்கன்"று துள்ளிப் போந்தரும் மறுகினூடே.

என்று தேர்ச்சில்லிலகப்பட்டிறந்தது; தாய்ப்பசு மன்னருக்கு முறையிட்டது. என்ன அற்புதம்! மனுநீதிகண்ட சோழர் தம் மகனுக்குப் பரிந்து பேசவில்லை. கன்றையிழந்த பசுவுக்காக வாதாடினார். வாய்பேசாப் பிராணியான அப்பசுவாலமாத்தப்பட்ட வழக்கறிஞர் போலல்லவா பேசினார்.

என்மகன் செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னிய னோருயிர் கொன்றா லவனைக் கொல்வேனானாற்
றொன்மனு நூல் தொடை மனுவாற்
றுடைப் புண்டதெனும் வார்த்தை
முன்னுலகிற் பெற மொழிந்தீர்
மந்திரிகள் வழக்கென்றான்.

இங்ஙனம் வழக்குரைத்த மன்னர், தம்மொரு மகனையிழந்து முறை செய்யத் தீர்மானித்தார். மனுநீதிகண்ட சோழர், உள்ளத் தூய்மையிலும் நீதியிலும், அன்பினும் தருமவேதை செய்து பார்த்த பரீட்சையிலே தேறி மேம்பட்டு விட்டார். புல்மையுலகமாகிய தேவருலகம், பூமழை மொழிந்து அவ்வீரரை வாழ்த்தியது. இத்தகைய மன்னர்கள் தங்கள் செங்கோன்மையாற் புனிதப்படுத்திய புண்ணிய பூமி.

"மாசிலாத மணிதிகழ் மேனி மேற்
பூசும்நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

ஆகிய அறுபத்து மூன்று தனியடிார்களையும் வேறு தொகையடியார்களையும் தந்தது.

**சமய வாழ்வின் உயர் நிலை**

எந்த நாட்லே, ஆட்சியாளர் தத்தம் சொந்த நலன்களைப் பேணுவதற்காக மக்களின் நலனைப் பணயம் வைக்கின்றனரோ, எந்த நாட்டின் கல்விமான்களும், தொண்டு புரிவோரும் தத்தம் குறுகிய அபிமானங்களிலிருந்து மீளமுடியாது தத்தளிக்கின்றனரோ, எங்கு அரசவை தொடக்கம் அங்காடி வீதிவரை பொய்மையும், நீதியீனமும், வன்கண்மையும் மலிந்து கிடக்கின்றனவோ அங்கு மகான்கள் எப்படிப் பிறக்கமுடியும்! சமய வாழ்வு மலர்வதாக எப்படிக் கூறமுடியும்!!

பேதமற்ற அன்பே இறைவனின் திருவுருவம். அன்புருவான அவனையடைவது நமது குறிக்கோளாயின், நமதுள்ளத்திற் பேதமற்ற அன்பையும் நீதியையும் வளர்த்து அதைத் தூய்மை செய்யவேண்டும். மனத்தூய்மையைச் சாதிப்பதே சமய வாழ்வின் முக்கிய அம்சமாகும்.

# அரி, சிவன், முருகன்

**செ. தனபாலசிங்கன்**

அற்புதமான கதை ஒன்று. புண்டரீக மகரிஷி நல்ல விஷ்ணு பக்தர். பெருமாளைத் தவிர வேறு தெய்வங்களைப் பாராத வைராக்கியம் உடையவர். சிவன் கோயில் என்றால், அந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்கமாட்டார். தப்பித் தவறிச் சிவன்கோயிலைக் கண்டால், கண்ணை மூடிக்கொண்டு வெகுவேகமாக நடப்பார். பரந்தாமன் கோயில் என்றால் மட்டும் கண்குளிரக் கண்டு வணங்கித் தொழுது செல்வார். புண்டரீக மகரிஷி ஒருநாள் திருப்பாற்கடல் என்ற ஊருக்கு வருகிறார். ஊரின் பெயரைக் கேட்டதுமே மகரிஷிக்கு மட்டில்லா மகிழ்ச்சி. பரந்தாமன் அங்கே பள்ளிகொண்டிருப்பான் என்று எண்ணியவர் ஊருக்குள் நுழைந்து, கோயிலைச் சென்று அடைகிறார். கோயிலைச் சுற்றி ஒரு மதில். சிவசின்னமான நந்தி அம்மதில்மேலே இருப்பதைப் பார்க்கிறார். புண்டரீக மகரிஷி. "அட பெருமாளே, சிவன் கோயிலுக்கா வந்துவிட்டோம். திருப்பாற்கடல் என்று பெயரை வைத்துக்கொண்டு இந்தச் சிவன் நம்மை ஏமாற்றியிருக்கிறார்" என்று தம்மையே நொந்து கொள்கிறார். கோயிலுக்குள்ளே நுழையாமலே திரும்பி விடுகிறார்.

மகாவிஷ்ணு இதனை அறிகிறார். பக்தனைத் திருப்பி அனுப்பப் பரந்தாமன் உள்ளம்இடம் தரவில்லை. கிழவேதியர் வடிவத்தில் புண்டரீக மகரிஷி முன் காட்சி தருகிறார். புண்டரீக மகரிஷியைப் பார்த்து, "என்ன சுவாமி, தரிசனத்துக்கு வந்து கோயிலுக்குள் நுழையாமலே திரும்புகிறீர்களே, காரணம் என்ன?" என்று வினவுகிறார். "இது பெருமாள் கோயில் என்று நினைத்து வந்துவிட்டேன். இது சிவன் கோயிலாக இருக்கிறது. நான் சிவனை வணங்குவதில்லை" என்று விடை சொல்கிறார் புண்டரீக மகரிஷி. "சுவாமி நீங்கள் பார்த்த கோயில் பெருமாள் கோயில் தான். நானும் கூட வருகிறேன். தரிசனம் செய்துவிட்டுப் போகலாம், வாருங்கள்" என்கிறார் கிழவேதியர். "பெருமாள் கோயிலில் ரிஷபம் ஏது? சிவன் கோயிலுக்குள் நம்மை இழுத்துக்கொண்டு போகப் பார்க்கிறீர்" என்று மறுக்கிறார் புண்டரீகர். வேதியர் விட்டுவிடுவதாய் இல்லை. புண்டரீகர் ஒரு நிபந்தனை போடுகிறார். "நான் கண்ணைக் கட்டிக் கொள்கின்றேன். நீர் என் கையைப் பிடித்து அழைத்துச் செல்லவேண்டும். கோயிலுக்குள் சென்றதும், பெருமாள் தானா என்று திருவுருவத்தைத் தடவிப் பார்த்துத் தெரிந்து கொள்கிறேன். பெருமாள் என்றால் கண்கட்டை அவிழ்த்துத் தரிசனம் பண்ணிக் கொள்கிறேன். இலிங்கத் திருவுருவில் சிவன்தான் என்றால், கண்கட்டை அவிழ்க்காமலே அப்புறம் வந்துவிடுகிறேன்" என்கிறார்.

வந்தவர் சும்மா இருப்பாரா? கண்ணையே கட்டச் சொல்லி அழைத்துச் செல்கின்றார். எல்லா மண்டபங்களையும் கடந்து மூலஸ்தானத்துக்கே இருவரும்

வந்துவிடுகிறார்கள். "இங்கு நிற்பவர் சிவனா, இல்லை; பரந்தாமன்" என்கிறார் வேதியர். கண்கட்டை அவிழ்க்காமலே தடவிப் பார்க்கிறார் புண்டரீகர். வேதியர் உடனே தன் சுய உருவத்துடன் அங்குள்ள இலிங்கத் திருவுருவை ஏந்தி நின்ற ஆவுடையார் பேரில் ஏறி நிற்கிறார். புண்டரீகர்க்குக் கிரீடம் தெரிகிறது. அதன்மேல் அரைஞாண் தெரிகிறது. சந்தேகம் இருக்கக் காரணமே இல்லை. கட்டிய கட்டை அவிழ்த்துக் கண்ணைத் திறக்கிறார் புண்டரீகர். தம்முன் இருப்பவர் திருப்பதி வெங்கடேசன் என்று தெளிகிறார். வேதியரைக் காணவில்லை. வெங்கடேசன் சிவனை ஏந்தும்ஆவுடையார் பேரில் எழுந்து நிற்பதையும் முழுங்கால்வரை இலிங்கத்திருவுரு அமைந்திருப்பதையும் பார்க்கிறார். உண்மை தெரிகிறது. சிவன் வேறு, விஷ்ணு வேறு அல்ல; இருவரும் பெருமாள் ஆவுடையார் பேரில் ஏறிக்கொண்டு, பிரசன்ன வெங்கடேசன் என்ற பெயருடன் இருப்பதைத் திருப்பாடற்கடலில் இன்றும் காணலாம்.

இதைப் படிக்கும்போது,

"பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் – என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன்".

என்று பொய்கையாழ்வாரும்,

"தாழ்சடையும்நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து".

என்று பேயாழ்வாரும்,

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றும் பிணங்குகின் றார்களே."

என்று திருமூலரும் பாடியவற்றை நாமும் பாடலாம் என்று தோன்றுகிறது.

**கடவுளின் கணக்கு அற்ற வடிவங்கள் :**

அரிசி மாவிலே எத்தனை எத்தனை பக்ஷணங்கள் செய்கின்றோம். ஒருவருக்கு விருப்பமான பக்ஷணம் மற்றொருவருக்கு விருப்பம் இல்லாது போய்விடுவதும்

உண்டு. அதனால் குறை ஒன்றும் இல்லையே. ஒருவர் தான் விரும்பிய பக்ஷணத்தை அருந்தலாம். இன்னொருவர் தனக்கு விருப்பமான பக்ஷணத்தை உண்ணலாம். இறைவழிபாடும் இத்தகையதே. கடவுள் மெய்ப்பொருள்; எண்ணிறந்த வடிவங்களில் இலங்குகின்றார். அத்தனைவித வடிவங்களையும் ஒருவர் வழிபடவேண்டும் என்பது வேண்டாததொன்று. அரவரவர் தாம் தாம்விரும்பிய ஒன்றை உபாசனாமூர்த்தியாகத் தெரிந்து எடுத்துக் கொள்ளலாம். கடவுளைப் பற்றிய கொள்கைகளும் கோட்பாடுகளும் கடவுளை அடைவதற்கான வழிகளே.

மெய்ப்பொருளாய் இலங்கும் கடவுள் ஒருவரே என்பது வேதாந்தத்தின் கோட்பாடு; சித்தாந்தத்தின் கோட்பாடும் இதுவே. அம் மெய்ப்பொருளின் பெருமைகள் எண்ணிலடங்கா. பெருமைகளைத் தலைமையாகக் கொண்டு ஒரு பொருளே பல தெய்வங்களாக அழைக்கப்படுகின்றது. மூர்த்திகளுள் சிவம், சக்தி, விஷ்ணு, கணபதி, கார்த்திகேயன், சூரியநாராயணன் ஆகிய ஆறு மூர்த்திகள் முக்கியமானவைகள் என்று சொல்வார்கள். இந்த ஆறு தெய்வங்களுக்கும் கூறுகள் பல இருக்கின்றன. உதாரணமாக, மகா விஷ்ணுவைத் தசாவதார மூர்த்திகளாகவோ, ஆதி நாராயணனாகவோ எப்படி வேண்டுமானாலும் வழிபடலாம். அங்ஙனமே சிவனை நடராஜனாகவோ, தட்சணா மூர்த்தியாகவோ, முருகனாகவோ எண்ணி வழிபடலாம். அங்ஙனமே அம்பிகையின் சொரூபங்களும் பலப்பல. ஒவ்வொருவரும் தனக்கு இஷ்டமான தெய்வத்தை உபாசனா மூர்த்தியாக எடுத்துக் கொள்ளலாம். அதில் தவறு ஒன்றுமே இல்லை. அந்த உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஒருவன் தனக்கு உகந்த மூர்த்தியாகத் தெரிந்தெடுக்கும் தெய்வத்தை மற்றொருவனும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது நியதி ஆகாது.

பரமாத்மன் ஒருவனே மெய்ப்பொருள். மனத்தின் வேகத்தைவிட அதிக வேகம் அவனுக்கு உண்டு. அதனால் அவன் இந்தியங்களுக்கு எட்டுபவனல்லன். அருகில் இருப்பவனும், அனைத்திலும் அந்தர்யாமியாய் இருப்பவனும் அவனே. பரமாத்மன் ஒருவனே என்று அறிபவனுக்கு மோகமும்இல்லை; சோகமும் இல்லை. ஈசன் அகண்ட சத்சித் ஆனந்தம் என்பதையும் பூரண ஏகத்துவம் என்பதையும் அந்த ஞானி அறிவான். பரம்பொருளுக்கு வடிவம் இல்லை; தேகம் இல்லை. அது நிர்மலமானது; சித்சொரூபம். இதைத் தெய்வம் என்றும், கடவுள் என்றும், பரம்பொருள் என்றும், பிரமம் என்றும் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றோம். இறைவன் ஒருவனாய், பலவாய், உடனாய் நிற்பவன். அதாவது, பொருட்டன்மையால் வேறு நிற்றல்,

ஒருவனாய் நிற்றல்; உலகு உயிர்களுடன் கலப்புத் தன்மையால் ஒன்றாய் விரவி நிற்றல், பலவாய் நிற்றல்; உயிர்க்கு உயிராதற்றன்மையால் இயைந்து இயக்குநதல், உடனாய் நிற்றல். இறைவன் அனைத்துமாய் நிற்கும் முறைமையை,

"உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமல னாகி நின்றனன் நீங்கா தெங்கும்".

எனச் சிவஞானசித்தியார் அருமையாகச் சொல்லிச் செல்லும்.

**அரி, சிவன், முருகன் :**

முருகப் பெருமான் வேல் எடுத்து விளையாடுகிறான், அப்போது அவன் கிண்கிணியின் இனிய நாதம் பதினான்கு உலகங்களிலும் கேட்கின்றது. கந்தப் பெருமானின் அற்புதத் திருவிளையாடல்களைக் கண்டு வியப்புறுகிறார் உமாதேவி அம்மையார். சிவனையே கேட்கிறார்: "குமரன் திருவிளையாடல்கள் அதி அற்புதமாக இருக்கின்றன. அவன் தங்களுக்கு ஒப்பானவன் என்றே கருதுகிறேன். அவன் பெருமையைச் சொல்லவேண்டும்." இறைவன் விடை சொல்கிறார் : "தாரகப் பிரம்மமாயுள்ள நமது ஆறு எழுத்தும் ஒன்றாகிக் குமரன் மந்திரமாகிய சடாட்சரமாயிற்று. நான் ரூபமற்ற நிட்களன். நீ அழிவில்லாத சக்தி. படைத்தல், காத்தல், அழித்தல், இம் மூன்றும் அடங்கும் மாயா லீலையான திரோபவம்,இந் நான்கினின்றும் அடியார்களை ஆட்கொள்ளும் அநுக்கிரகம் ஆகிய ஐந்தொழிற்கும் அதிபனாக ஐந்து முகமுடைய சதாசிவனாக நாம் இருக்கிறோம். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேஸ்வரி. எனவே, அவன் உனது ஸ்வரூபத்தையும் எனது ஸ்வரூபத்தையும் ஒருங்கே கொண்டுளான். ஆதலால் அவன் அறுமுகனானான். தேவர் மனிதர் முதலிய உயிர்களிடத்துக் காணப்படும் செல்வம், கல்வி, அழகு அத்தனையும் முருகன் பெருமைக்குச் சான்று சொல்வன. அவன் பெருமை அளப்பரிது. கந்தப்பெருமான் எமது சக்தியே. அவனுக்கும் நமக்கும் பேதமே இல்லை."

இதோ கந்தபுராணம் :

"நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
துன்முக மாகி உற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண்டு எழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே.

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்".

உருவமில்லாத அருட்பெருஞ்சோதி ஆண்டவன். ஆறு முகங்கள், பன்னிரண்டு தோள்கள், பதினெட்டுக் கண்கள் கொண்ட அருள் உருவத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்கொண்டான் என்பதை வடமொழி ஸ்காந்தம் "ஷட்வக்த்ரம் த்வாதசபுஜம் அஷ்டாதச விலோசனம் ஶுபம், அங்கீக்ருதம் சுபம் லோகானாம்" எனச் சிறப்பித்துப் பாடுகின்றது.

"நானே முருகன்" என்று சிவன் சொல்ல, "நானே முருகன்" என்று பேசுகிறான் பகவான் கீதையிலோ. இதோ அவன் சுலோகம் :

"புரோதஸாம் சமுக்யம் மாம் வித்தி பார்த்த பருஹஹஸ்பதிம்
ஸேனானீனாமஹம் ஸ்கந்த : ஸரஸாமஸ்மி ஸாகர:"

"பார்த்தா, புரோகிதர்களுள் முக்கியமான பிரகஸ்பதி நான் என்று அறிவாயாக. சேனைத் தலைவர்களுள் நான் முருகக் கடவுள். நீர்நிலைகளுள் நான் சமுத்திரம்".

அருணகிரிநாத சுவாமிகளும் தம் திருப்புகழிலே திருமாலை வாயாரப் பாடுவார். சில திருப்புகழ்கள் நிறைவுறும் போது, பெருமாளே என்று முருகனையே விழித்துப் பரவுவார். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும் நாவினுக்கு அரசரும்,

"ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தருங் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே."

என்றும்,

"எரியலால் உருவ மில்லை ஏறலால் ஏற லில்லை
குரியலாற் போர்வை யில்லை காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா அமரர் கூ"டிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலால் தேவி யில்லை ஐயன்ஐ யாற னார்க்கே."

என்றும் முறையே பாடியதெல்லாம் நம் சிந்தனையைத் தெளிவிப்பனவாகும்.

**சங்கர நாராயணன் :**

தத்துவத்தின் மூலவிதையாக இருக்கும் இறைவன் பிரபஞ்சமாக விரிந்து நிற்கிறான். பிரபஞ்சத்தை ஒடுக்கும் பொழுது தன் விரிவைச் சுருக்கிக்கொண்டு அவன் குவிகிறான். சர்வசங்கார காலத்தில் எல்லா உயிர்களையும் தன் தாளிணைக் கீழ் ஒடுக்கி மறைத்துக் கொள்கிறான். மீண்டும் படைப்புக் காலத்தில் தனக்குள்ளே அடக்கிய உயிர்களை எல்லாம் வெளிவிடுகின்றான். அவன் எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கிறான். உயிரை விழுங்கி உமிழ்ந்து திரியும் செயல்களைத் திருமால் மாத்திரம் செய்யவில்லை. சிவபிரானும் அவற்றைச் செய்கிறார். இருவரும் ஒரே பிரபஞ்சத்தில் இந்தத் திருவிளையாட்டை நிகழ்த்துகிறார்கள். உண்மையில் ஒருவரே இருவேறு தோற்றமாகக் காட்சி அளிக்கிறார். இருவரும் ஒருவர் என்ற உண்மையைச் சிவபிரானுடைய மூர்த்தங்களில் ஒன்றாகிய சங்கர நாராயணத் திருக்கோலம் நமக்குக் காட்டித் தரும். இந்தத் திருக்கோலத்திலே திருமாலோடு சிவன் ஒன்றியிருக்கிறான். சிலபோது தான் வேறாக, திருமால் வேறாகப்பிரிந்து நிற்பான்; பிணங்கள் புகும் மயானத்தை இருக்கையாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான். இதைப் பாடுகிறார் ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தர் :

“விரிந்தனை குவிந்தனை விழுங்குயிர் உமிழ்ந்தனை
திரிந்தனை குரந்தொசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய்”.

அப்பரும், சம்பந்தரும், கச்சியப்பரும், கருணைக்கு அருணகிரியும் பாடிய பின்புமா அரியும் சிவனும் முருகனும் வேறு வேறு என்று குதர்க்கம் பேசவேண்டும்?

அரி, சிவன், முருகன் அனைவரும் ஒருவரே.

நன்றி : கீதை அமுதம்

# சான்றோர்

திரு.வே. தனபாலசிங்கம் அவர்கள்

சான்றோர் என்போர் அறிவு, அன்பு, ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்த அறிஞர் என்று பொருள் கூறுவர். இவர்களைச் சான்றவர் எனவும் அழைப்பர். இவர்களிடம் சான்றாண்மை குடிகொண்டிருக்கும். சான்றாண்மை என்றால் பல நற்குணங்கள் நிறைந்து அவைகளை ஆளுந்தன்மை என்றுபொருள் கொள்வர். சான்றோரிடம் சால்பு அமைந்திருக்கும். சால்பு என்பது நிறைந்த பண்பு.

திருக்குறள் 83ஐ நோக்குவோம்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு

ஐந்து சால்பு ஊன்றியதூண்"

எல்லோரிடத்தும் கொள்ளும்அன்பு, பழிபாவங்களுக்கு நாணும் நாணம், யாவர்க்கும் உதவியாக ஒழுகும் ஒப்புரவு, பழகியவர்களிடத்துச் செலுத்தும் கண்ணோட்டம். எவர்க்கும் தீமை இல்லாத வாய்மை ஆகிய இந்த ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கும் தூண்களாகும்.

நற்பண்புகளை ஆளுந்தன்மையுடைய சான்றோரிடம் பணிவு, இன்சொல், பொறுமை, சினம்காத்தல் ஆகியன பிரகாசிக்கும். இவர்கள் பொதுக்கடமைகளைப் பெரிதாக மதிப்பர். புகழையோ, மதிப்பையோ பெரிதாக விரும்பமாட்டார். இன்னா செய்தார்க்கும் இனியன செய்வார். தமக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வர். மகாத்மா காந்தி தன்னைச் சுட்டவரைத் தண்டிக்கவேண்டாம் என்று கூறினார். ஊயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு சான்றோரிடம் இல்லை. தாம்பிழை செய்தால் பிழையைப் பிழை என்று ஒப்புக்கொள்வர்.

தன்னலமற்ற சால்பு சான்றோரிடம் இருப்பதன் காரணமாகவே இவர்கள் வறுமையால் வாடுவது இல்லை. சால்பு இவர்களுக்கு திண்மையைக் (வலிமை) கொடுக்கும். இவர்கள்பக்கம் சாராது நடுநிலையில் வாழ்வர். ஆண்மையும் ஒழுக்கமும் உள்ள இவர்கள் பிறர் மனைவியை விரும்பி நோக்கார். பயன் இல்லாத சொற்களைச் சொல்லார். இவர்களுக்கு தாம் கடைப்பிடிக்கும் உண்மை என்ற விளக்கே விளக்காகும். இவர்கள் தீய வழியில் வரும் நன்மையிலும் வறுமை மேலானது என்ற எண்ணம் உடையவர்கள். தவறான வழியில் கிடைக்கும்செல்வத்தை விரும்பார். வள்ளுவப் பெருந்தகை குறள் 69இல் சொல்லுகிறார்

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்டதாய்".

பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து பெற்ற துன்பத்தை மகன் பிறந்தபோது தாய் மகிழ்ச்சி அடைகின்றாள். அதிலும் பார்க்கத் தன் மகன் நற்பண்புகள் உள்ள சான்றோன் எனக் கேட்கும் போது பெரிய மகிழ்ச்சி அடைகின்றாள்.

ஆங்கிலப் பேரறிஞர் நியூமென் என்பவர் சான்றோன் (Gentleman) பற்றி எழுதியதன் தமிழ் சுருக்கம் பாருங்கள் – "சான்றோன் என்பவன் பிறருக்குத் துன்பம் செய்யாதவன். அவன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களின் இன்னலைத் தீர்ப்பதே தொழிலாகக் கொள்பவன். பிறர் நடத்தும் நல்ல இயக்கங்களுக்குப் பொல்லாங்கு செய்யமாட்டான். பிறர் உள்ளம் புண்படும்படி மாறுபட்ட கருத்துக்களை வேறுபடக்கூற மாட்டான். பிறர் செயல்களில் சந்தேகப்படமாட்டான்.

பிறரை நன்கு மதிப்பான். சான்றோன் எல்லோரிடத்தும் அன்புமஅருளும் உடையவனாக இருப்பான். பிறருக்கு உதவி செய்யும்போது, உதவி செய்வதாக் காட்டிக்கொள்ளாமல் உதவி செய்வான். தன்னைப் புகழ்ந்து பேசமாட்டான். இன்னா செய்தார்க்கும் இனியது செய்தலே அவன் செயலாகும். பண்புடன் நடந்து கொள்வான். இன்பதுன்பங்களைச் சமனாகப் போற்றுவான். ஒருவருடன் வாதிடும்போது வரம்பு கடந்து செல்லமாட்டான். நீதிமுறையிலிருந்து விலகமாட்டான்.

தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும் நம்பிக்கை உள்ளவர்களைத் தாக்கிப் பேசி இழிவுபடுத்தும்செயல் செய்யமாட்டான். பிறர் பக்தியை மதிப்பான். நல்ல சிறந்த பழக்கவழக்கங்களைப் போற்றிப் பேசுவான். சான்றோனிடம் பிடிவாதம் இருக்காது. சமயத் தலைவர்களை மதிப்பான். மற்றவர் மனம் நோக எதுவும் செய்யான். விரிந்த மனப்பாங்கும் நேர்மையும் அவனிடம் காணப்படும்.

மேலே கூறப்பட்ட சால்புள்ளவர்கள் கிராமங்கள் தோறும், நாடுகள் தோறும்இருப்பார்களேயானால் சாதாரண மக்கள் அவர்கள் சொல்வார்த்தை பெரிதென மதித்து வாழ்வார்களேயானால் நாடு எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பாருங்கள். நல்ல தலைவர் யாவரும் சான்றாண்மை உள்ளவர்களாகத் திகழ்ந்தால் நாட்டுப் பாராளுமன்றம் எப்படி அமையும் என்று சிந்திக்கின்றேன். ஆசிரிய உலகம் ஓரளவு சான்றோராக இருப்பார்களானால் நல்ல மாணாக்கர்கள் தோன்றமுடியாதா? வள்ளுவர் காட்டிய வழியில் இல்வாழ்க்கை வாழ்வோமானால் – மேன்மை கொள் சைவநீதி மக்கள் உள்ளத்திலே பதியுமானால் நல்ல நாடு உருவாகும். சான்றோர் தொகை கூட உள்ளநாடுகள் எவை என்ற போட்டி ஏற்படவேண்டும். போர் வேண்டாம், ஆயுத உற்பத்தி வேண்டாம். முப்படைகளும் வேண்டாம் என்ற நிலை உருவாகவேண்டும். உலக சமாதானம் வேண்டும்.

## சிறுவர் தொடர் கட்டுரை – 2

# கோவிலில் வழிபட வாருங்கள்

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்காக நீராடி, தூய்மையாக நெற்றியில் திருநீறு அணிந்து புறப்பட்டு வந்த கணாதிபனையும் அம்பிகையையும் பார்த்தபோது அம்மம்மாவிற்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

"கோவிலுக்கு மட்டுமல்ல, எப்போதும் நெற்றியிலே திருநீறு பூசியிருக்க வேணும் பிள்ளைகள். திருநீறு மிகுந்த சக்தி வாய்ந்தது. "மந்திரமாவது நீறு" தேவாரம் தெரியுந்தானே".

"தெரியும் அம்மம்மா. திருநாவுக்கரசருக்கு சூலை நோய் தீர்த்தது, பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் போக்கியது எல்லாம் திருநீறுதான் அம்மம்மா".

அம்மம்மா கூறிக்கொண்டிருக்கையிலேயெ இடையே தனக்குத் தெரிந்த வற்றைக் கூறிமுடித்தாள் அம்பிகை. அம்மம்மா எடுத்து வைத்திருந்த தட்டின் அருகிற் சென்று பார்த்துக் கொண்டிருந்தான் கணாதிபன். வாழைப்பழச் சீப்பு, தேங்காய், வெற்றிலை, பாக்கு, கற்பூரம் முதலியவற்றை அவதானித்த அவன் "அருச்சனைத் தட்டுத்தானே அம்மம்மா?" என்று கேட்டவாறு அதனைத் தூக்கினான். கையிலே தூக்கிச் செல்லக்கூடியதாக தட்டின் மேற்பகுதியில் வளையமாகக் கைபிடி இருந்தது. அவன் விளையாட்டுத்தனமாக கைபிடியிலே பிடித்துத் தூக்கி கையை முன்பின்னாக ஆட்டியவாறு நடக்க ஆரம்பித்தான்.

"கணாதிபன் அப்படி அந்தத் தட்டத்தை ஆட்டாதே".

அம்மம்மா பதற்றத்துடன் சிறிது கடுமையாகவே கணாதிபனுக்குக் கூறவும் அவன் திகைத்து நின்றான்.

"அந்தப் பொருட்களெல்லாம் சிவபெருமானுக்கு நிவேதிப்பதற்காக கொண்டு போகிறோம். இறைவனை வணங்கச்செல்லும்போது எங்களுக்கியன்ற நிவேதனப் பொருட்களைக் கொண்டுபோய் அவனது சந்நிதியில் நிவேதித்து வழிபடவேண்டும். வசதியில்லாதவர்கள் பூவையாவது கொண்டு போகவேண்டும். அப்படிக் கொண்டு செல்லும் பொருட்களை தூய்மையாக, பக்தியுடன் பக்குவமாகக் கொண்டு செல்லவேண்டும். பெரியவர்களுக்கென்று ஏதாவது எடுத்தச் செல்லும்போது எப்படி எடுத்துச் செல்வீர்கள்? இப்படி விளையாட்டுத்தனமாகக் கொண்டு போவீர்களா?"

தான் பதற்றமடைந்த காரணத்தைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அம்மம்மா எடுத்துக் கூறினார்.

"நான் கவனமாகக் கொண்டுவருவேன் அம்மம்மா"

கணாதிபன் தட்டைப் பக்குவமாகக் கொண்டு செல்ல மூவரும் கோவிலை நோக்கிப் புறப்பட்டனர்.

"நேற்றைக்கு அந்த நாய்க்குட்டி, பூனைக்குட்டியை வெல்லவே இல்லை. இன்றைக்கு என்ன நடக்கும்அண்ணா?"

நேற்றுப் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைக் குறித்து அம்பிகை அண்ணனுடன் உரையாட ஆரம்பித்தாள்.

"அம்பிகை, கோவிலுக்குப் போகும்போத கடவுளை நினைத்துக்கொண்டு, அவரைப் பற்றி உரையாடிக்கொண்டு, அல்லது தேவாரம் பாடிக்கொண்டு போகவேண்டும். வேறு சிந்தனைகளில் மனதை அலையவிடக்கூடாது.

அம்மம்மா அம்பிகைக்கு அறிவுரை கூறிக்கொண்டுவரும்போது அதை ஆமோதிப்பது போன்று கோவில் மணியோசை கேட்டது,

"ஆயத்த மணி கேட்குது", என அம்மம்மா கூறினார்.

"அம்மம்மா, இந்த மணியோசையைக் கேட்கவே மனத்திலே பக்தி ஏற்படுகிறதல்லோ".

"அதுமட்டுமில்லை அம்பிகை, இந்த மணியோசை தீயதையெல்லாம் போகச் செய்கிறதாம். நல்லனவற்றை வருமாறு அழைக்கிறதாம்." அம்பிகை தன் அனுபவத்தைக் கூற கணாதிபன் தான் அறிந்தவற்றைப் பகிர்ந்தான். தன் அனுபவத்தைக் கூற கணாதிபன் தான் அறிந்தவற்றைப் பகிர்ந்தான்.

"ஏன் அம்மம்மா இந்த மணியை ஆயத்த மணி என்று சொன்னனீங்கள்?"

"இந்த மணி பூசை நடப்பதற்கு முன் அடிக்கப்படுகிறது. இந்த மணி அடித்ததும் பூசைக்கான ஆயத்தங்கள் நடந்து குறிப்பிட்ட நேரத்தின் பின் நடைபெறப்போகிறதென்று ஊகித்து கோவிலுக்கு வருவார்கள். இவற்றை விட இப்போது அம்பிகை சொன்னதைக் கேட்டதும் வேறொன்றும் தோன்றுகிறது. இறைவனை வழிபட எங்கள் மனதை இந்த மணி ஆயத்தப்படுத்துகிறது என்று சொல்லலாம். கடவுளை வழிபட, தியானிக்க முன்னர் மனதை ஒருநிலைப்படுத்துகிறோம் அல்லவா? கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடும் முன்னர் மனதை ஒருநிலைப்படுத்த இந்த மணியோசை உதவுகிறது".

"அந்தக் கோவில் கோபுரமும் அதற்கு உதவுகிறதுதானே அம்மம்மா?" என கணாதிபன் கேட்க அம்மம்மாவும் அம்பிகையும் கோபுரத்தைப் பார்த்தார்கள்.

"சிவ சிவா, அப்பனே எம்பிரானனே அரோகரா" என்று அம்மம்மா கரங்களை தலைமேல் உயர்த்திக் குவித்து கோபுரத்தை நோக்கி பக்திபூர்வமாகக் கும்பிட்டார். அம்மம்மாவைப் பார்த்து அதேபோல் பிள்ளைகளும் தொழுதனர்.

"இந்தக் கோபுரம் சிவபிரான் உறையும் கோவிலினுடையதாகும். கோபுரத்தைத் தூலலிங்கம் என்றும் கூறுவார்கள். தூலம் என்பது வெளிப்படையாகத் தெரிவது. இக்கோபுரம் எமக்குத் தென்ளெனத் தெரியும் தெய்வம். கோவிற் கோபுரத்தைக் காண்பதுஇறைவனைக் காண்பது போன்றது."

"அம்மம்மா, கோவிலுக்கு வந்திட்டோம்", மகிழ்வுடன் அம்பிகை அம்மம்மாவின் பேச்சின் இடையே புகுந்தாள்.

"கோவிலுக்குள்ளே போக முன் கை, கால் கழுவி சுத்தமாகப் போகவேண்டும்" என்றவாறு தண்ணீர்க்குழாயை நோக்கிச் சென்ற அம்மம்மாவை இரு பிள்ளைகளும் பின்தொடர்ந்தனர். அம்மம்மா சிரித்தபடி சென்றார்.

"ஏன் அம்மம்மா சிரிக்கிறீங்கள்?"

"அந்தக் காலத்தை நினைத்துப் பார்த்தேன்".

"அதிலே சிரிக்க என்ன இருக்கு? எங்களுக்கும் சொல்லுங்களேன்" அம்பிகை அம்மம்மாவைத் துருவினாள்.

"அந்தக் காலத்திலே இப்படி குழாய் கிடையாது. குளங்களைத் தான் நீர்த்தேவைக்குப் பயன்படுத்தினார்கள். குளத்தில் நீராடி அதன்பின் கோவிலுக்குப் போய் வணங்கினார்கள். எங்கள் ஊர்களில் குளங்களில்லாத இடங்களில் நிலத்தை அகழ்ந்து கேணி அமைத்தார்கள். ஊற்று நீர் நிறைந்திருக்கும்இடத்திற்குச் செல்ல சரிவாகப் படிக்கட்டுக்கள் கட்டப்பட்டிருக்கும். அவற்றில் இறங்கிச் சென்று நீராடிவிட்டோ கைகள் கால்களைச் சுத்தம் செய்து கொண்டோ கோவிலுக்குச் சென்றார்கள். கேணி என்றால் என்ன என்று பார்த்துக் தெரிந்துகொள்ளக்கூட இப்போது அவை இல்லை".

"மழைத்தண்ணீரும் அதில் சேகரிக்கப்பட்டிருக்குமே" கனாதிபன் அதிலிருந்த நன்மையொன்றைக் கண்டுபிடித்து தெரிவித்தான்.

ஊரையாடிக்கொண்டே கை, கால்களைக் கழுவிக்கொண்டு அருச்சனைப் பொருட்களையும் கழுவியபின் கோவிலினுள்ளே மூவரும் சென்றனர்.

மிகுதி அடுத்த இதழில்...

# அமரர் மனிதநேயர்
# திரு.வி. கைலாசபிள்ளை அவர்கள்

அன்பு, பண்பு, இரக்கம், அறிவு, மனிதநேயம் மிக்க மகத்தான பெரியவரை சைவத்தமிழ் உலகம் இழந்துவிட்டது. கைலாசபிள்ளை என்ற கல்விமானை, அறங்காவலரை இனிமேல் எங்கே காண்போம். யாழ்ப்பாணத்தில் சைவப்பாரம்பரியமிக்க குடும்பத்தில் அராலி என்னும் அழகிய கிராமத்தில் 1934ம் ஆண்டு பிறந்தவர் அமரர் விஸ்வநாதர் கைலாசபிள்ளை அவர்கள். அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பின் புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்ற இவர், மிகச்சிறிய வயதில் பட்டயக் கணக்காளர் பரீட்சையில் சித்திபெற்று கணக்காளராக விளங்கினார். பிரித்தானியரின் நிர்வாகக் கட்டமைப்பில் இயங்கிய யோன்கீல்ஸ் நிறுவனத்தில் பிரதம கணக்காளராகப் பணியாற்றி பலரதும் பாராட்டைப் பெற்றார். பட்டயக் கணக்காளர் சங்கத்தில் பல பதவிகளை வகித்தார். பிரதி தலைவராக பெருமையோடு தெரிவு செய்யப்பட்டவர். தான் சார்ந்த நிறுவனங்களின் தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கி பலரது நல்வாழ்வுக்கு வித்திட்டவர்.

பிறப்பிலேயே சுத்தசைவப் போசகராக அன்னாரது குடும்பம் விளங்கியதனால் தன் வாழ்நாள் முழுவதும் சுத்த சைவப்போசனம் மட்டுமே அருந்தும் பண்பாடு காத்தவர். சிவதீட்சை பெற்று தினமும் சிவலிங்க பூசை செய்து வழிபாடு செய்யும் பண்புடையவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவனாக விளங்கிய காலந்தொட்டு சமயப்பணிகளில் ஆர்வம் காட்டிய இவர், திருக்கேதீஸ்வர அறங்காவலர் சபையில் நீண்டகாலம் பணியாற்றி பல திருப்பணிகள் நிறைவேறுவதற்கு உதவியவர். திருக்கேதீஸ்வர அறங்காவலர் சபையின் தலைவராக விளங்கிய இவர், இந்திய அரசாங்கத்துடன் பல தடவை பேச்சுவார்த்தை நடத்தி இந்திய அரசின் நிதியுதவியில் திருக்கேதீஸ்வர திருத்தலத்தை கருங்கல் கோவிலாக மாற்றுவதற்கு வித்திட்டவர். அகில இலங்கை இந்துமாமன்றத்தின் வளர்ச்சியில் அன்னார் ஆற்றிய பங்களிப்பு மறக்கமுடியாதது. அன்னாரது தலைமையின்கீழ் இந்துமாமன்றத்தின் பிராந்திய அலுவலகம் நல்லூரில் 3 மாடியில் கட்டிமுடிக்கப்பட்டது. இந்துமாமன்றத்தின் பொன்விழா மகாநாடு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சொந்தப் பணத்தை தர்ம கைங்கரியத்திற்கு கொடுப்பதில் இவருக்கு நிகர் இவரே. திரு. கைலாசபிள்ளை அவரது பாரியார் திருமதி. அபிராமி கைலாசபிள்ளை அவர்களும் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களும் மனிதநேயம்

என்ற ஓர் அறக்கட்டளை நிறுவனத்தை ஆரம்பித்தார்கள். இவ்அறக்கட்டளை வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல ஆதரவற்றோருக்கு பேராதரவு வழங்கிவருவது அனைவரும் அறிந்ததே. குழந்தைகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், விழிப்புலனற்றோர், அவயவங்களை இழந்தோர் பலருக்கு மாதாமாதம் மனிதநேயத்தினூடாக அமரர் அவர்கள் செய்த மாபெரும் தொண்டு இப்பெரு மனிதரை அடையாளப்படுத்தியது. அகில இலங்கை கம்பன் கழகத்தின் வளர்ச்சியிலும் இப்பெரியாரின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதிகம் பேசுவதில்லை. அமைதியாக அடக்கமாக தன் பணியை உயிர்பிரியும்வரை செய்தவர். 2009ம் ஆண்டு வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து பாதிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் கற்கவந்த மாணவர்களுக்கு 140 இலட்சம் ரூபா வரை மனிதநேயம் ஊடாக வழங்கியவர் இவர். மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, இரத்மலானை சக்தி இல்லம், சிவபூமி முதியோர் இல்லம் – தொல்புரம், இனியவாழ்வு இல்லம் என பல நிறுவனங்களுக்கு அள்ளிக்கொடுத்த அபயகரத்தை எங்கே இனிக்காண்பது?

எல்லா இனத்தவரின் நன்மதிப்பைப் பெற்ற இவருக்கு எதிரிகள் இல்லை. பகையின்றி, பகடு இன்றி பத்திரமாக தன் பணியைச் செய்து விருதுகளை நாடாது ஓர் வித்தகனாக வாழ்ந்தவர். இலங்கை பங்குச் சந்தையில் தலைவராக வீற்றிருந்து வளத்தை வளப்படுத்தி பெருமை பெற்றவர் இவர். கணக்கியல் துறையில் ஒரு வித்தகர். நிதி முதலீடுகள் பற்றிய நீண்ட அறிவுடையவர். பல்வேறு நிறுவனங்களுக்கு ஆலோசகர். ஆடம்பரமின்றி, ஆரவாரமின்றி ஓர் அறிஞனின் மண்ணக யாத்திரை முற்றுப்பெற்றுவிட்டது. விண்ணகம் நோக்கிச் சென்றுவிட்டார். கா்லமுணா்ந்து உதவிய ஜீவகாருண்யனை காலன் கைலாசத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டான். கைலாசத்தில் ஒரு கைலாசம் சிறப்பிக்கும் என்பதில் ஐயமில்லை. குறிஞ்சி மலர் காலத்திற்கு ஒருமுறை பூப்பது போல மனிதர்களிலும் சில மகத்தான மனிதர்கள் பிறக்கிறார்கள். இப்பிறவிப் பெரும்பலனை பலர் வாழப் பயன்படுத்திய ஆத்மா விடை பெற்றுவிட்டது. பரமாத்மா பரவசத்துடன் இவ்வாத்மாவை வரவேற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இனிய மனிதனின் பண்பை நினைந்து வணங்குவோம். அவர் காட்டிய வழியில் வாழ முயல்வோம்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
உபதலைவர்,
அகில இலங்கை இந்துமா மன்றம்.

# இதய அஞ்சலி



**மனிதநேயர்**

**திரு.வி. கயிலாசபிள்ளை அவர்கள்**

(முன்னாள் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,

முன்னாள் தலைவர் – திருக்கேதீஸ்வரம் அறங்காவலர் சபை,

தலைவர் மனிதநேய அமைப்பு

**சமய, சமூக சேவைகளால்**

**சகலரது மனங்களிலும் வாழும்**

**ஐயாவுக்கு**

**எமது இதயபூர்வமான அஞ்சலிகள்**

**நிர்வாகசபை**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

*தெல்லிப்பழை.*

# யாழ்ப்பாணத்து மடக்கட்டிடங்களில் போஷகனின் வகிபாகம்

குமுதா சோமசுந்தரக் குருக்கள்

சமூகத்தின் முக்கிய அலகாகவும், மனித வாழ்வியல் அனுபவத்துடனும், அரசியல் தீர்ப்புடனும் இணைந்தும் உருவாகிய கட்டிடக்கலையின் உருவாக்கத்தில் சமூக, பண்பாட்டு, புவியியல் எனப் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் பொருளாதாரமும் அப்பொருளாதாரத்தை தருகின்ற போஷகன் (Patron) யாரென்பதும், அவனது போஷிப்பு (Patronage) என்பதும் மிக முக்கிய காரணிகளாகும்.

ஏனெனில், கட்டிடத்தை கட்டுவிப்பவனது (போஷகன்) பொருளாதாரம், அந்தஸ்து, சமூக, சமயப் பண்பாட்டு நம்பிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய அவனது கருத்துநிலை அனைத்தும் சேர்ந்தே போஷிப்பு அமைகின்றது. அப்போஷிப்பே கட்டிடத்தைத் தீர்மானிக்கின்றது.

ஒரு கட்டட உருவாக்கத்தில் போஷகன் என்பவன் பொருளாதாரத்தையும், இடம், அதற்கான உந்துதல் என்பவற்றையும் தருபவனாகக் காணப்படுவான். அந்த வகையில் யாழ்ப்பாணத்து மடக்கட்டிடங்களின் உருவாக்கத்தில் போஷகன் என்பவன் பல்வேறுபட்ட நிலையில் காணப்பட்டுள்ளான். அடிப்படையில் போஷகனை இரண்டுவிதமாக நோக்கலாம்.

1. பொருளாதார வலுவுடையவன்
2. உந்துதல் உடையவன்

பொருளாதார வலுவுடையோராக 18ஆம், 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியறிவு பெற்று காலணித்துவ வாதிகளின் கீழ் முக்கிய பதவிகள் வகித்தவர்கள் பலர் காணப்பட்டனர். அதாவது முதலியார், மணியகாரர், சிறாப்பர் (Shroff) என்போர் ஆங்கிலேயரின் கீழ் தொழில் புரிந்ததுடன், பல ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரராகவும் விளங்கினர். அதுமட்டுமன்றி அவர்கள் தமது தொழில் மூலம் பெற்றிருந்த சமூக அந்தஸ்தும் அதிகாரமும் காரண மாக அதிகாரிகளின் உடனடி அனுமதி பெற்று மடக்கட்டிடங்களை அமைக்கமுடிந்தது. இதனால் இவர்கள் மடக் கட்டிடங்களை உருவாக்கியதுடன், அதற்காக நிலங்களையும் மானியமாக வழங்கினர்.

இதேவேளை இக்காலத்தில் இந்தியாவிலிருந்து வியாபார நோக்குடன் வந்திருந்த செட்டிமார்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறியது மட்டுமன்றி அவர்கள் ஆலய கட்டிடங்களை அமைப்பதற்கும், அவற்றை நிர்வகிப்பதற்குமென இந்தியாவிலிருந்து கைவினைஞர்களையும், பிராமணர்களையும், கலைஞர்களையும் வரவழைத்தனர். இதனால் அவர்களைக் கொண்டு மடங்களை அமைத்தது மட்டுமன்றி பிராமணர்களுக்கும், இசை வேளாளர்களிற்கும் என அக்ரகாரங்களையும், மடங்களையும் கட்டுவித்துள்ளமையை அறிய முடிகின்றது. இதனால் செட்டிமார்களும் முக்கிய போசகர்களாக விளங்கியுள்ளனர்.

1900களின் பின்னர் ஆலயங்களின் அருகாக எழுந்த சிறிய மடங்களிற்கான போசகர்களாக சிங்கப்பூர், மலேசியா பென்சனியர்களும் அரசாங்கத்தில் வெவ்வேறு முக்கிய தொழில்புரிந்தவர்களும் விளங்கினர். இதனால் பல சிறிய மடங்கள் உருவாகின. அதுமட்டுமன்றி தனிப்பட்ட பொருளாதார வலுவற்றவர்கள் மடங்களை உருவாக்கும் விருப்பில் குழுமமாகக் சேர்ந்து தமது கிராமத்தின் /ஊரின் பெயரில் மடங்களை அமைத்தனர். இவர்களை உந்துதலுடைய போசகர்கள் எனலாம்.

1950களின் பின் முன்பிருந்த போஷகர்களினிடத்தை ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றோர்களும், அவர்களது குடும்பங்களும் பெற்றுக்கொண்டன. இவர்களின் போஷிப்பின் கீழ் ஆலயத்தின் பேரில் மடங்கள் உருவாகின. பின்னர் போராட்ட காலங்களில் மடங்களின் எழுச்சியும் போஷிப்பும் மிகக்குறைந்தே காணப்பட்டது. ஆனால் 2000ம் ஆண்டின் பின்னர் அவை யாத்திரிகர் விடுதியாகவும், அன்னதான கல்யாண மண்டபங்களாகவும் பெரிய அளவில் உருப்பெற்று வருகின்றன. இதற்கான போஷகனாக அரசு அல்லது இந்து கலாசார அமைச்சு விளங்ககுின்றது. இதன் போஷிப்பின் காரணமாக பல்வேறுபட்ட ஆலயங்களையொட்டி பல்வேறு மடங்கள் உருப்பெற்று வருகின்றமையை அவதானிக்கலாம்.

இவ்வாறு காலத்திற்குக்காலம் உருவாக்கப்பட்ட மடக்கட்டிடங்களின் பின்னால் போஷகனின் கருத்து நிலையும் முக்கிய இடம்பெறுகின்றது. ஏனெனில் போஷகன் சமயம் பற்றியும், அதன் நம்பிக்கை பற்றியும், பொதுநலன் பற்றியும் கொண்டுள்ள கருத்தியல் தான் அவனை மடக்கட்டிடங்களை அமைக்கத் தூண்டுகின்றது.

எவ்வாறான தொழில், அந்தஸ்து, பொருளாதாரம் என்பன இருப்பினும், நம்பிக்கையின் அடிப்படையிலோ, மடங்களின் பொதுத்தேவை பற்றியோ தற்சார்பான கருத்தியல் என்பது போஷகனிடம் இல்லையெனில், அவன் மடக்கட்டிடங்களின் உருவாக்கத்திற்கு உந்துசக்தியாக அமையமாட்டான். இவ்வாறான கருத்தியலானது 18ம், 19ம் நூற்றாண்டில் புரட்டஸ்தாந்து மதத்திற்கு எதிராக நாவலரால் முன்வைக்கப்பட்டது என்பதை விட, அக்கால மக்களுக்கு ஊட்டப்பட்டதென்றே கூறலாம். இதன் தொடர்ச்சியிலேயே மடங்களை உருவாக்குகின்ற, பாதுகாக்கின்ற, அன்னதானம் வழங்குகின்ற கருத்துநிலை மக்களிடம் மிகப் பரவல் அடைந்ததுடன் அவர்களை அதன்படி செயற்படவும் வைத்தது.

இதேவேளை, 19ம் நூற்றாண்டுக்கு முன்னர் ஆலயங்களினுள் அனைத்துச் சாதியினரையும் அனுமதிக்காதது போன்றே மடங்களினுள்ளும் அனுமதிக்கப்படவில்லை. அவ்வேளை, தத்தம் சாதியினர் சுதந்திரமாக நடமாடுவதற்குத் தத்தமக்கென மடங்கள் அமைத்தல் அவசியம் எனும் கருத்தியல் அவர்களிடம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியில் வெளிநாடுகளுக்குச் சென்று பொருளாதார வளம் பெற்ற அவ்வாறான குடும்பங்கள் தத்தம் சாதியினருக்கென மடங்கள் அமைத்தனர். அத்துடன் அதற்குப் பொதுப்பெயர்களை இட்டுள்ள போதிலும் அவை அவர்கள் சாதியின் பெயரால் அழைக்கப்பெற்று வந்துள்ளமையையும் அறியமுடிகின்றது. இவ்வாறான பல மடங்கள் செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் இருந்துள்ளதை கள ஆய்விலிருந்தும், கலாநிதி சண்முகதாஸ் அவர்களின் ஆற்றங்கரையான் என்னும் நூலிலிருந்தும் அறியமுடி

கின்றது. மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தோர் தமது அந்தஸ்தை வெளிக்காட்ட வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் சிறிய மடங்களை அமைத்தனர். இது இன்னாரால் கட்டப்பட்ட மடம் எனக் கூறப்படுவது தமக்கு கௌரவமான ஒன்று எனும் கருத்தியல் அவர்களிடம் இருந்தது. இதனாலும் பல்வேறுபட்ட மடங்கள் ஆலயங்களின் அருகாக அமைக்கப்பட்டுள்ளன. இதனாலேயே அம்மடங்களுக்குத் தமது பெயரை இட்டுள்ளதனையும் காணலாம். கீரிமலை வைத்திலிங்கம் மடம், நல்லூர் சின்னர் மடம் என்பவற்றைத் தத்தம் பெயர்களில் அமைத்த மடங்களாக நோக்கலாம். அத்துடன் தமது பாவம், தாம் செய்த அதர்மமான செயற்பாடுகளிலிருந்தான விடுதலை, அல்லது அதனால் சமூகத்தில் தம்மைக் கீழிறக்கும் தன்மையிலிருந்தான தீர்வாகவும் மடங்களை அமைத்துள்ளனர். மடங்களின் உருவாக்கத்தில் போஷகனது போஷிப்பும் அவனது கருத்தியலும் முழுமை பெறுவது அவனது பொருளாதார வலுவின் அடிப்படையியேயே. மேற்கூறப்பட்ட அவனது கருத்தியல் கட்டட உருவாக்கத்திற்கு தூண்டுகோலாக அமைந்தாலும் அதனைச் செயற்படுத்த அவனிடம் பொருளாதார வலு தேவைப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு போஷகனதும் போஷிப்பில் மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது பணவலு இல்லாதபோது தம்மிடம் நிலமிருப்பின் மடக்கட்டட உருவாக்கத்திற்கு வேண்டிய நிலங்களைச் சிலர் தந்துள்ளனர். சிலர் அம்மடங்களை பரிபாலிப்பதற்கு வேண்டிய பொருளாதாரத்தைத் தரத்தக்க நன்செய் நிலங்களை (வயல் நிலங்கள்) தந்தனர். பணவலு உடையவர்கள் தாம் முன்னின்று மடங்களை புதிதாக அமைத்தும் பழைய மடங்களை புதுப்பித்தும் வந்துள்ளனர். இதேவேளை ஓரளவு பண வலு பெற்றவர்கள் இளைப்பாற்று மடம் போன்ற சிறிய மடங்களையும், வழிப்போக்கர் மடங்களையும் அமைத்துள்ளனர்.

18ம், 19ம் நூற்றாண்டில் பணவலு உடையவர்களாக முதலியார்கள், மணியகாரர்கள், சிறாப்பர் தொழில் புரிந்தோர், செட்டிமார் என்போர் விளங்கியுள்ளனர். இவர்கள் பொருளாதாரத்தில் மட்டுமன்றி, அதிகாரம் அந்தஸ்து என்பவற்றிலும் வலுவுடையவர்களாக இக்காலத்தில் விளங்கியமையால் இவர்களால் பாரிய மடங்களையும் சத்திரங்களையும் அமைக்கமுடிந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக ஆனைக்கோட்டை நமசிவாய முதலியார் சத்திரத்தினையும், கீரிமலை சிறாப்பர் மடத்தினையும் குறிப்பிடலாம்.

சில இடங்களில் பொருளாதாரத்தைப் பங்குபோட்டு மடங்களை அமைத்துள்ளனர். உதாரணமாக நல்லூர் சின்னர் மடம் மிகப்பெரியது. ஆனால் அதன் முற்பகுதி ஒருவராலும், பிற்பகுதி இன்னொருவராலும் கட்டுவிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

ஓரளவு பொருளாதார வலுவுடைய மத்தியதர வர்க்க மக்கள் தாம் குழுமமாக கிராமத்து /ஊர் மக்கள் சேர்ந்து முன்னர் கூறியது போன்று தத்தம் ஊரின் பெயரிலோ /கிராமத்தின் பெயரிலோ மடங்களை அமைத்துள்ளனர். உதாரணமாக மாவிட்டபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள "திருநெல்வேலியார்" மடத்தினைக் குறிப்பிடலாம்.

இதேவேளை வட்டுக்கோட்டை அராலிப்பகுதியிலுள்ள பழைய நாட்சார் வீடுகளின் உருவாக்கத்தில் எவ்வாறு மலேசிய, சிங்கப்பூர் பொருளாதார வருகை

செல்வாக்குச் செலுத்தியதோ அது போன்றே இவ்வாறான சில மடங்களின் உருவாக்கத்தில் மலேசிய, சிங்கப்பூர் பென்சனியர்களின் பொருளாதாரமும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

அதன்பின்னர் குறிப்பாக 1980களின் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்குத் தொழில் நோக்கோடு சென்றோரது பொருளாதாரம் அநேகமான வீடுகளின் கட்டிட அமைப்பை மாற்றியது போன்று புதிய மடங்களை உருவாக்கியதோடன்றி, அவற்றின் சில கட்டமைப்பையும் மாற்றியுள்ளன. இங்கு நமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் காட்டுதல் என்பதே முக்கியமானதாகின்றது. முன்னர் கூறிய சமயம், நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையிலன்றி, அவற்றின் பெயரால் தமது "பெயர் பொறித்தல்" என்பதே முக்கியம் பெறுகின்றது. இதன் தொடர்ச்சியில், இன்று வன்னிப் பிரதேசத்தில் இறந்தோரின் நினைவாக மிகப்பெரிய பெயர் பொறிக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையங்களின் அதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது. தென்னிலங்கையில் யுத்தத்தில் மரித்த இராணுவ வீரரது நினைவாக அவர்களுடைய உற்றார், உறவினர் எத்தனையோ கிராமங்களிலும் நகரங்களிலும் நினைவுச் சின்னங்களாக பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்துள்ளனர். (சசங்க பெரேரா : 2004 : 109) என சசங்க பெரேரா கூறுவது போன்று ஏனைய பிரதேங்களிலும் இவ்வாறான தன்மையை அவதானிக்க முடிகின்றது. இதன்பின்னால் வெவ்வேறுபட்ட சமூக, அரசியல் காரணிகள் இருப்பினும், சமூகத்தில் தமது அந்தஸ்தை பிரதிபலித்தல் எனும் அடிப்படையில் பொதுமைப்படுகின்றது.

தொடர்ந்து குறிப்பாக 2002ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட இடைப்பட்ட சுமுகமான நிலைவரம் யாழ்ப்பாணத்துக் கட்டிடங்களில் மாற்றங்களை யேற்படுத்தியதுடன், மட விடயத்தில் புதிய போஷகனையும் புதிய பொருளாதாரத்தையும் ஏற்படுத்தியது. அதாவது இந்துசமய கலாசார அமைச்சே அவ்வாறான புதிய பொருளாதாரத்தையும் மடக்கட்டுமானத்தையும் தந்த போஷகனாகும்.

சமய, சமூக தேவையின் அடிப்படையில் எழுந்த வெவ்வேறுபட்ட மடக்கட்டிடங்களின் உருவாக்கத்தில் இவ்வாறாக காலத்திற்குக் காலம் உருவான போஷகனின் பொருளாதாரமும் கருத்துநிலையும் அடிப்படையாக அமைந்த நிலையில் போஷகன் என்பவன் மிக முக்கிய பங்கு வகிப்பவனாக விளங்கியுள்ளமையை அறியமுடிவதுடன், இவ்வாறான போஷகனது போஷிப்பு என்பதே யாழ்ப்பாணத்து மடக்கட்டிடக்கலையில் ஒரு சிறப்புத்தன்மையை ஏற்படுத்தியது என்பதும் மறுக்கமுடியாததொன்றாகும்.

நன்றி : யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக் கட்டிடக்கலையும்

# ஈழத்துக் காந்தி
# அமரர் பொன்னம்பலம் கந்தையா அவர்கள்

ஈழத்து வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் வடபால் அமைந்துள்ள நெய்தலும் மருதமும் சூழ்ந்து செந்நெல்லும் கரும்பும் தெங்கும் விளைகின்ற சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம்பெரும் பதியாம் மாதகல். இக்கிராமத்தில் வாழ்ந்த ஆறுமுகம் பொன்னம்பலத்திற்கும் நன்னிப்பிள்ளைக்கும் இரண்டாவது மகனாக 19-12-1918இல் பிறந்தவர் தான் அமரர் கந்தையா. இவரின் சகோதரர்களாக செல்லையா, தில்லைநாதன், சின்னப்பிள்ளை ஆகியோருமாவர்.

கந்தையா தன்னுடைய ஆரம்பக்கல்வியை மாதகல் நுணசை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தொடங்கி 5ம் வகுப்பு வரை அங்கு கல்வி பயின்றார். பின்பு மாதகல் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் 7ம் வகுப்பு வரை கல்வி கற்றார். அதன்பின்பு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் கற்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்றார்.

இங்கு தமிழ்ப்பேரறிஞரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பண்டிதர் க.பொ. இரத்தினம் தலைமை ஆசிரியராக இருந்தார். கந்தையாவின் கல்விச் செயற்பாடுகளையும் நல்லொழுக்கத்தையும் அவதானித்த இவர் அவரிடம் அன்பும் பரிவும் காட்டி அவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினார். இங்கு அமரர் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை 3 பகுதிகளிலும் சித்தியடைந்ததால் தலைமையாசிரியரால் அப்பாடசாலையிலேயே தற்காலிக உதவி ஆசிரியராக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

தலைமையாசிரியர் க.பொ. இரத்தினத்தின் சிபார்சின் பேரில் வவுனியாவில் உள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 19 வயதில் ஆசிரியராக கடமையை ஆரம்பித்தார். அதன்பின்னர் ஏறாவூர் அரசினர் பாடசாலை, பெரிய கிண்ணியா அரசினர் பாடசாலை, தாமரை வில்லில் புதிய அரசினர் பாடசாலை, திரியாய் அரசினர் பாடசாலை, நுவரெலியா பலேகல அரசினர் பாடசாலை என்பவற்றில் 10 வருடங்களாகக் கடமையாற்றி அதற்கு மேல் அரச சேவையிலிருந்து விலகுவதாக கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்து விலகிக்கொண்டார்.

அரச சேவையிலிருந்து விலகிய அவரை திருகோணமலையில் அன்று கல்வியதிகாரியாக இருந்த சந்திரசேகரம் அப்போது இராமகிருஷ்ணமிஷன் தலைவராக இருந்த சுவாமி நடராஜானந்தாவிடம் அழைத்துச் சென்று கதைத்து கொக்குவில் இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியராக நியமனம் பெற்றுக்கொடுத்தார். பின்னர் தம்பலகாமம் இ.கி.மி. கோணேஸ்வரா வித்தியாலயம், திருகோணமலை புனிதவளவனார் பாடசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றி 25 வருட ஆசிரியப் பணியின் பின்னர் தனது 43ஆவது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

"தன்கடன் அடியேனைத் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கிற்கமைய ஓய்வு பெற்றதிலிருந்து 99ஆவது வயதில் அமரராகும்வரை அதனை மெய்ப்பிக்கும் வகையில் பணி செய்வதையே கடனாகக் கொண்டு வாழ்ந்தார். மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் படிக்கும்போது அவரது நண்பர் பெருமையினர் மகாத்மா காந்தியின் சுயசரிதையான "சத்தியசோதனை" என்னும் நூலைப் படிக்கும்படி கொடுத்தார். அதைப் பலமுறை வாசித்து காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அன்றிலிருந்து காந்தியக் கொள்கைகளை இயன்றளவு பின்பற்றி வாழ்ந்து காட்டினார். காந்தியடிகள் அரிச்சந்திர நாடகம் பார்த்து உண்மையே பேசவேண்டும் எனும் இலட்சியத்தைக் கடைப்பிடித்தார். உயிர் வாழ்வதற்கு உண்ணுவதேயன்றி சுவைபட உண்பதற்காக உயிர் வாழ்வதில்லை என்ற காந்திய தத்துவத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார். 2-4-1949இல் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை உருவாக்க உறுதுணையாக இருந்தார். சங்கத்தின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டு பல ஆண்டுகளாகக் கடமையாற்றினார்.

இச்சங்கத்தின் மூலம் உருத்திரபுரம் காந்தி நிலையம், கோணாவில் தொழில்பயிற்சி நிலையம், தருமபுரம் மகளிர் இல்லம் போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்து பல சமூகப்பணிகளை ஆற்றும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தார். இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில் இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இரமணர், அரவிந்தர், திருவள்ளுவர், சுப்பிரமணியபாரதியார், ஔவையார், இராமலிங்க வள்ளலார் போன்ற இன்னோரன்ன பெரியோர்களின் ஆன்மீக அறநீதிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி அவர்களின் ஆன்மீக மேம்பாட்டை வளர்க்கவேண்டுமென பெருவிருப்பம் கொண்டார்.

ஓய்வுபெற்றதன் பின்னர் இச்சிந்தனைக்கு மெருகூட்டி எல்லா ஆலயத் திருவிழாக்களிலும் ஆன்மீகப் புத்தகங்களைக் கொண்டுசென்று அடக்கவிலையில் விற்பனை செய்து பொதுமக்களுக்கு சமய ஆன்மீக அறக்கருத்துக்களைப் பரப்பினார். சிறந்த அறிவு நூல்களை வாசித்தும் கட்டுரைகளை எழுதியும் மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வந்தார். அமரர் அவர்களுக்கு கிடைத்த பட்டங்களும் பாராட்டுக்களும் ஏராளம்.

ஒருசிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வழங்கப்பட்ட சிவத்தமிழ் விருது, திருகோணமலை ஆளுநர் விருது, திருகோணமலை நகரமுதல்வர் போன்ற விருதுகளும் சிரத்தாரத்தினம், சமய, சமூக, காவலன் காந்தீயச்சுடர், இறைபணிச்செம்மல், மூதறிஞர், திருமலையின் வாழ்நாள் சமூக, சமய சாதனையாளருக்கான பட்டம் போன்றவை இவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. அன்னாரின் மறைவுச் செய்தி என்னை மீளாத்துயரில் ஆழ்த்தியது. பிறப்பும் இறப்பும் நிச்சயமெனத் தெரிந்தும் ஒரு சிலரின் இறப்பை என்னால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அளவையூர் சைவப்புலவர், பண்டிதர்

வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்

# தாய்மார் எழுவர் வழிபாடு

**நடன காசிநாதன் எம்.ஏ**
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

தமிழகத்தில் தாய்மார் எழுவர் வழிபாடு பல்லவர் காலம் தொட்டு இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகிறது. தாய்மார் எழுவரின் உருவ அமைப்புகள் சில காலக் கட்டங்களில் சிலவித மாறுதல்கள் பெற்றிருக்கின்றன. இவர்கள் வழிபாடு தாய் வழிபாட்டின் ஒரு அங்கமாகவே இருத்தல் வேண்டும்.

தாய் வழிபாடு தமிழகத்தில் இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளதாய்த் திருமேனி தக்கதொரு சான்றாக அமையும். தமிழகத்தில் நிகழ்ந்துள்ள அகழ்வாய்வுகளிலும் சில தாய் உருவ சுடுமண் பொம்மைகள் கிடைத்திருக்கின்றன. சிலம்பு கூறும் கண்ணகி வழிபாடு கூட தாய் வழிபாட்டின் ஒரு கூறேயாகும் என்று கருதுவாரும் உள்ர்.

ஆகவே அவைகளின் தொடர்ச்சியே தாய்மார் எழுவர் வழிபாடும் என்று கருதினால் தவறாகாது. தாய்மார் எழுவரின் தோற்றத்துக்கான காரணத்தைப் புராணங்கள் கீழ்வருமாறு கூறுகின்றன.

"காஸ்யப முனிவருக்கு திதி மூலமாக இரு ஆண்மகவுகள் பிறக்கின்றன. ஒருவன் ஹிரண்யாக்ஷன்; மற்றொருவன் ஹிரண்யகசிபு. திருமால் வராஹ அவதாரம் எடுத்து ஹிரண்யாக்ஷனையும், நரசிம்மாவதாரம் எடுத்து ஹிரண்யகசிபுவையும் கொன்றுவிட்டார். ஹிரண்யாக்ஷனின் மகன் விஷ்ணு பக்தனாக மாறி அரச வாழ்க்கையைத் துறந்தான். அவனுக்குப்பின் ஆட்சி செய்த அந்தகாசுரன், தமது ஆழ்ந்த தவத்தின் பலனாகப் பிரமாவிடமிருந்து பலவித வரங்களைப் பெற்றான்.

அதன் காரணமாக அகங்காரம் அடைந்த அந்தகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தலானான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவன் அவர்களது முறையீடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அந்தகாசுரனும் பார்வதியைத் தூக்கிச் செல்வதற்காக கைலாயத்துக்கு வந்துவிட்டான். சிவன் மிகவும் கோபமுற்று அந்தகாசுரனை அழிப்பதற்கு தமது பூதகணங்களுடன் முற்பட்டார். திருமாலும் மற்ற கடவுள்களும்சிவனுக்கு உதவியாகச் சென்றனர். போரில் திருமாலும் மற்ற தெய்வங்களும் புறமுதுகிட்டோடினர். சிவன் மட்டும் தனித்து நின்று அசுரன் மீது அம்பு மாரிகளைப் பொழிந்தார். அம்புகள் அசுரனது உடலைத் துளைத்தன. இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் மண்ணில் விழ விழ, பல அந்தகாசுரர்கள் தோன்றினர்.

சிவன் தமது திரிசூலத்தால் உண்மை அந்தகாசுரனைக் கொன்றார். திருமால் சக்கராயுதத்தால் பிற அந்தகாசுரர்களைக் கொன்றொழித்தார். அந்தகாசுரனின் உடலிலிருந்து பீறிட்டெழுந்த இரத்தம் மண்ணில் விழுவதைத் தடுப்பதற்காக சிவன் தமது வாயிலிருந்தெழும் தீயிலிருந்து யோகேஸ்வரி என்னும் சக்தியை உருவாக்கினார். அதே காரணத்துக்காக இந்திரன் முதலானவர்களும் தங்களது சக்திகளை அனுப்பினர். அவர்களே பிராமணி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டா ஆகியோர் ஆவர். இவர்கள் முறையே பிரமன்,

மாஹேஸ்வரர், குமரன், விஷ்ணு, வராஹர், இந்திரன், எமன் ஆகியோரின் மனைவியர்களாவர். மேலே கூறப்பட்டவைதான் தாய்மார் எழுவரின் தோற்றம் பற்றிப் புராணங்களில் குறிக்கப்படுவதாகும்.

ஆனால் வராஹ புராணம் மட்டும் தாய்மார்கள் எண்மர் என்று குறிப்பிடுகிறது. சிவன் தோற்றுவித்த யோகேஸ்வரியையும் இது சேர்க்கிறது. தாய்மார் எண்மர் கொண்ட சிற்பம் ஒன்று திருவையாறு ஐயா றப்பர் கோயிலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் "அஷ்டமாத்ரிகா" என்று அழைக்கப்படுகிறது.

"வராஹ புராணம் மேலும் குறிப்பிடுகையில் இந்தத் தாய்மார் எண்மரும் எட்டு வகையான குணநலன்களைச் சித்திரிப்பவை என்று கூறுகிறது. யோகேஸ்வரி காமத்தையும், மாஹேஸ்வரி க்ரோதத்தையும், வைஷ்ணவி லோபத்தையும், பிராமணி தற்பெருமையையும், கௌமாரி மோகத்தையும், இந்திராணி மாத்சர்யத்தையும், சாமுண்டா பொய்மையையும், வாராஹி அசூயையும் குறிப்பதாகத் தெரிவிக்கிறது.

கூர்மபுராணம் தாய்மார் எழுவரைப் பற்றி மேலும் சில செய்தியை அறிவிக்கிறது. அந்தகாசுரனை அழித்தொழித்த பிறகு சிவன் பைரவரையும், மாத்ரிகர்களையும் பாதாள லோகத்துக்குச் சென்று உறையுமாறு ஆணையிடுகிறார். அவர்களும் அவ்வாறே பாதாளலோகம் சென்றுவிடுகின்றனர். சில நாட்களில் பைரவர் திரும்பி வந்து சிவனோடு ஐக்யமாகிவிடுகிறார். மாத்ரீகர்களுக்கு உணவு ஏதும் கிடைக்காத காரணத்தால் கண்ணில் பட்டதையெல்லாம் உட்கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர். உடன் பைரவர் விஷ்ணுவிடம் முறையிட்டு மாத்ரீகர்களின் கொடூரத் தன்மையை நீக்கிவிடும்படி வேண்டுகிறார். விஷ்ணுவும் அவ்வாறே செய்துவிடுகிறார்.

சுப்ரபேதாகமம், இத்தாய்மார் எழுவரும் நிர்ரிதா என்பானை அழிப்ப தற்காகப் பிரமனால் தோற்றுவிக்கப்பட்டார்கள் என்று கூறுகிறது. இவ்வெழுவரும் தங்கள் கணவர்மார்கள் தரித்திருக்கும் படைக்கலன்களையே கொண்டு விளங்குவர் என்று அவ்வாகமம் தெரிவிக்கிறது.

பொதுவாக இவ்வெழுவர் உருவங்களும் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் நான்கு கரங்கள் கொண்டு காணப்படும். மேலிரு கரங்களில் அவைகளுக்குரிய படைக்கலன்களையும், கீழிரு கைகள் அபய, வரத நிலையிலும் இருக்கும். இடக்காலை மடக்கி ஆசனத்தின் மீது வைத்து, வலக்காலைக் கீழே தொங்கவிட்ட நிலையில் காணப்படுவர்.

இவ்வெழுவர் உருவங்களோடு சிவனது உருவம் யோகேஸ்வரராக அல்லது வீரபத்ரராகவும், விநாயகரது உருவமும் காணப்படும். தாய்மார் எழுவரும் அமர்ந்திருக்க, அவர்களின் வலப்பக்கம் கடைசியில் வீரபத்ரரும், இடப்பக்கக் கடைசியில் விநாயகரும் அமர்ந்திருப்பர். இவர்கள் தாய்மார் எழுவருக்கு பாதுகாவலர்கள் ஆவர்.

ஹரப்பா நாகரிகக் காலத்தைச் சார்ந்த முத்திரைத் தகடு ஒன்றில் தாய்த்

தெய்வத்தின் உருவமும், அத்தோடு ஏழு துணைப் பெண் தெய்வங்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருப்பதாக வரலாற்று அறிஞர்களால் கருதப்படுகிறது. இந்த ஏழு துணைப் பெண் தெய்வங்களும் தாய்மார் எழுவரையும் குறிப்பதாகக் கொள்ளலாம் என்றும் பேசப்படுகிறது. ரிக் வேதத்திலும் தாய்மார் எழுவர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ஆனால் அவர்களது பெயர்களைக் குறிப்பிடவில்லை. வேதகாலத்துக்குப் பிறகுதான் அவர்களது பெயர்கள் கூறப்படுகின்றன.

இத் தாய்மார் எழுவரின் உருவங்கள் இந்தியா பூராவும் பரவலாகக் காணப்படுகின்றன. முதன் முதலில் சாளுக்கியர்கள் காலத்தில்தான் (கி.பி. 6ம் நூற்றாண்டு) இவ்வழிபாடு முக்கியத்துவம் பெற்றதாகத் தெரிகிறது. அவர்களது கலைப்படைப்புகளான ஐஹொளே, எல்லோரா போன்ற இடங்களில் தாய்மார் எழுவரின் உருவங்கள் மிக்க வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளன. முற்காலச் சாளுக்கியர்கள் தங்களைத் தாய்மார் எழுவரால் (சப்தயோகமாத்ரு) வளர்க்கப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. சாளுக்கியர்களின் செப்புப் பட்டயங்களில் தாய்மார் எழுவருக்கு வணக்கம் கூறப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர மன்னர் ஆகிய எல்லா அரசர்களுடைய காலத்திலும் இவ்வழிபாடு இருந்து வந்ததற்கான சான்றுகள் நிரம்ப கிடைத்துள்ளன. தாய்மார் எழுவரின் உருவ அமைப்புக்கள் பலவிதங்களில் காணப்படுகின்றன.

தாய்மார் எழுவரில் சாமுண்டாவுக்குப் பதிலாக சில இடங்களில் "நாரசிம்ஹ" காணப்படுகிறது. வழக்கமாகக் காணப்பெறும் பிராமி, மாகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்ற வரிசையில் சில நேரங்களில் சில மாற்றம் காணமுடிகிறது. அம்மாற்றத்துக்குச் சில காரணமும் கூறப்படுகிறது. எதிரிகளை முறியடிக்கவேண்டுமெனில் பிராமி நடுவில் அமைக்கப்படுதல் வேண்டும்; ஊரில் மக்கள் தொகை அதிகரித்தல் வேண்டுமெனில் சாமுண்டா நடுவில் வைக்கப்படுதல் வேண்டும்.

பொதுவாக அமர்ந்த நிலையில் காணப்படும்தாய்மார் உருவங்கள் சில இடங்களில் நின்ற நிலையிலும் காணப்படுகின்றன. சில இடங்களில் இரு கரங்களோடும், சில இடங்களில் நான்கு கரங்களோடும் உள்ளன. சிலவற்றில் எல்லா தெய்வங்களும் ஒரே மாதிரியான முகத்தையும், சிலவற்றில் அவ்வவற்றுக்குரிய முகத்தோடும் தோற்றமளிக்கின்றன. ஒரே மாதிரியான முகம் காணும்போது அவைகளின் படைக்கலன்களைக் கொண்டும், வாகனங்களைக் கொண்டும்தான் அவை எவையெவை என்று அடையாளம் கூறமுடியும்.

சில தாய்மார் எழுவர் சிற்பங்களில், எல்லாத் தெய்வமும் மும்மூன்று தலைகளோடு காணப்படுகின்றன. அப்பொழுதும் படைக்கலன்களைக் கொண்டும், வாகனங்களைக் கொண்டும்தான் அவை எவையெவை என்று கண்டுபிடிக்க இயலும்.

தாய்மார் எழுவர் சிற்பங்களில் முற்காலத்தவை (கி.பி. 7ஆம் நூற்றாண்டு) சில தங்கள் வாகனங்கள் மீதே அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. சில பீடத்தில் அமர்ந்திருக்க புடைப்புச் சிற்பமாக வாகனங்கள் செதுக்கப்பட்டும் தோன்றுகின்றன. சில தெய்வங்களுக்கு இவ்வாகனங்கள் சில இடங்களில் மாறுபட்டுக்

காணப்படுகின்றன. வழக்கமாக இடக்காலை மடித்து ஆசனத்தில் வைத்து வலக்காலைக் கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் நிலையில்தான் காணப்படுவர். கருநாடக மாநிலத்தில் உள்ள பேலூரில் இரு கால்களையும் மடித்துவைத்து யோகாசன நிலையில் அமர்ந்து காணப்படுகின்றனர். திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயிலுள்ள தாய்மார் எழுவர் சிற்பங்கள் வலக்காலை மடக்கி ஆசனத்தில் வைத்து இடக்காலைக் கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கின்றனர்.

எல்லோராவில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்களில் மற்ற சிற்பங்கள் இடக்காலை மடித்து ஆசனத்தில் வைத்து, வலக்காலைக் கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்க பிராமணி மட்டும் இரு கால்களையும்கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறாள்.

சில இடங்களில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் தங்கள் தலைகளுக்குப் பின்னால் பிரபையோடு காணப்படுகின்றன. பல இடங்களில் தாய்மார் எழுவரும் தனித்தனிச் சிற்பமாகத் தோற்றம் தர, சில இடங்களில் ஒரே கல்லில் எழுவரும் புடைப்புச் சிற்பமாகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

தாய்மார் எழுவருடன் சிவபெருமான் நாட்டியமாடுவது போன்றும்சில சிற்பங்கள் காணப்படுகின்றன. திருப்பரங்குன்றத்தில் ஆனந்தத் தாண்டவமாடுகின்ற நடராஜப் பெருமானின்இடப்புறத்தில் தாய்மார் எழுவர் நாட்டியமாடும் காட்சி பிற்காலத்தில் கட்டப்பட்ட சுவரால் மறைக்கப்பட்டு சிறிதளவே தெரிகிறது. கூர்ஜாபிரதிகாரர் கலைப்பாணியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பத்தில் சிவனும், கணேசரும் சப்த மாதர்களுடன் நடனம் ஆடுவது போன்று காணப்படுகிறது. இது தற்போது அலஹாபாத் அருங்காட்சியகத்தில் உள்ளது.

பூரியில் காணப்படும் அன்னையர் எழுவரின் சிற்பங்கள் தனித்த சிறப்புடைய தாக உள்ளன. எழுவரும் “அர்த்தபர்யங்க“ நிலையில் அமர்ந்திருக்க ஒவ்வொருத்தரின் மடியிலும் குழந்தை காணப்படுகிறது. அவர்கள் உயிர்களைக் காக்கும் அன்னையர் என்பதைச் சித்தரிக்குமுகத்தான் அவர்கள் மடியில் குழவிகள் காட்டப்பட்டுள்ளன. பாட்னா அருட்காட்சியகத்தில் உள்ள அன்னையர் எழுவர் சிற்பங்களிலும், அவைகளின் இடது தொடையின்மீது குழந்தைகள் காணப்படுகின்றன. இவை கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தமிழகத்தில் இதுவரையில் சப்த மாதாக்கள் குழந்தைகளை வைத்திருப்பது போன்று காணப்படவில்லை. ஒருவேளை இங்கு சப்த கன்னிகளாகத் தான் (மணமாகாதவர்கள்) அவர்களை வழிபட்டார் களோஎன்று எண்ண இடமேற்படுகிறது. புவனெஸ்வரத்திலுள்ள பரசுராமேஸ்வரர் கோயிலின் வடக்குச் சுவரில் வடமேற்கு மூலையில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் காணப்படுகின்றன. முக்தேஸ்வரர் கோயிலில் விதானத்தில் விரிந்த தாமரை மலரில் தாய்மார்கள் அமர்ந்திருப்பதாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வங்காளத்திலும் தாய்மார் எழுவர் சிற்பங்கள் கிடைக்கின்றன. குறிப்பாகச் சாமுண்டி, ரூபவிதயா, சித்தயோகேஸ்வரி, தந்துரா என்ற உருவங்களில் சிறப்பாக வழிபடப்படுகின்றன.

தமிழகத்தில் இதுவரையில் கிடைத்திருக்கின்ற சப்த மாதர்களின் (தாய்மார் எழுவர்) சிற்பங்களில் செங்கற்பட்டு மாவட்டம், குன்றத்தூரில் கிடைத்திருப்பதுதான் மிகவும் பழைமையாதாகும். இவை கி.பி. 7ஆம்நூற்றாண்டின் முற்பகுதியைச்

சார்ந்தவையாகும். இவை மணற்கல்லினால் உருவாக்கப்பட்டவை. இதற்கு அடுத்த நிலையில் காஞ்சி கயிலாயநாதர் கோயிலில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்களைக் குறிப்பிடலாம். இவை கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டி, திருச்சி மாட்வடம் ஆலம்பாக்கம் ஆகிய இடங்களில் காணப்படுவது கி.பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்ததாகும்.

இவைகளையடுத்து செங்கற்பட்டு மாவட்டம் திருநின்றவூர், திருத்தணிகை, சீமாவரம், வட ஆர்க்காடு, மாவட்டம் காவேரிப்பாக்கம், மதுரை மாவட்டம் கீழ்மாத்தூர் ஆகிய இடங்களில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்கள் கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை.

முற்காலச் சோழர் கலைப்பாணியிலும் பல இடங்களில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் நிரம்ப கிடைத்துள்ளன. ஆனாலும் இந்தக் காலக்கட்டத்தில் அச்சிற்பங்களோடு வாகனங்கள் செதுக்கப்பட்டிருக்கவில்லை. சில இடங்களில் அவைகளுடன் கொடிகள் காணப்படுகின்றன.

பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர மன்னர் காலங்களைச் சார்ந்த தாய்மார் சிற்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏதும் இக்காலக் கட்டத்தில் இல்லை. மிகவும் பிற்காலத்தில் எழுவருக்கும் சிற்பங்கள் செதுக்குவதற்குப் பதிலாக ஏழு செங்கற்களை வைத்து வழிபட்டிருக்கின்றனர். தற்காலத்திலும் அவ்வாறு வழிபட்டு வருகின்றனர்.

தாய்மார் எழுவர் சிற்பங்கள் பொதுவாக கோயிலின் உட்பிரகாசத்தில், கருவறைக்கு நேரே தென்பகுதியில் காணப்படும். முற்காலச் சோழர் காலத்தில் சப்தமாத்ரிகளுக்குப் பரிவாரச் சிற்றாலயம் எடுப்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டம் திருக்கட்டளை, பழுவூர் ஆகிய இடங்களில் இன்றும் காணலாம். பிற்காலங்களில் இவைகளுக்காகத் தனிக்கோயில் எடுப்பிக்கப்பட்டு வழிபட்டு வந்திருக்கிறது. அம்மாதிரி தனிக்கோயில்களாகக் காணப்படுவனவற்றைத் தற்பொழுது செல்லாண்டியம்மன், பொன்னியம்மன், பிடாரி கோயில் என்று மக்கள் கூறுகின்றனர். இத் தனிக்கோயில்கள் பெரும்பாலும் ஊரின் புறத்தேயே காணப்படுகின்றன.

தாய்மார் எழுவரின் செப்புத்திருமேனிகள் இதுவரை தமிழகத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் வட இந்தியாவில் இமத்பூர் என்ற இடத்தில் சப்தமாதர்களின் செப்புத் திருமேனிகள் கிடைத்து இப்பொழுது பிரிட்டிஷ் அருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் செப்புத்திருமேனிகள் பிராமணி, கௌமாரி, வைஷ்ணவி ஆகிய மூன்று மட்டுமே உள்ளன. தாய்மார் எழுவருக்கென தனிக்கோயில்கள் சில இருந்தமையும் அவைகளுக்குக் கொடையளிக்கப் பெற்றமையும் சில கல்வெட்டுகள் மூலமாகவும் தெரியவருகின்றன.

திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கத்திலுள்ள செல்லியம்மன் கோயில் சப்தமார்களுக்காக அமைக்கப்பட்ட கோயில் என்பது அங்குக் காணப்படும் கல்வெட்டு மூலம் புலனாகிறது. அக்கோயில் திருவொற்றியூரன் என்னும் இராயர் அலங்காரப்பிரியன் என்பவனால் கட்டப்பட்டதெனவும், அக்கோயில் செலவுகளுக்காக அவன் நிலக்கொடை அளித்தான் எனவும் அக்கல்வெட்டு கூறுகிறது. சப்த

மாதர்களுக்காகத் தனிக்கோயில் காணப்படுவதில் இதுவே மிகவும் பழைமையானதாகும்.

தென் ஆர்க்காடு மாவட்டம், எறும்பூரிலுள்ள கடம்பவனேஸ்வரர் கோயிலில் அஷ்டபரிவார கோயில் எடுப்பிக்கப்பட்ட செய்தி கல்வெட்டால் உணரமுடிகிறது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீமதிரை கொண்ட கோப்பரகேசரிவர்மற்கு யாண்டு இருபத்தெட்
2. டாவது வடகரை நல்வாயலூர்க் கூற்றத்துத் தேவதானம் உறுமூர்ச் சிறுத் திருக்கோயில்
3. பெருமானடிகளுக்கு ஸ்ரீ விமானக்கற்றளி எடுப்பித்து அஷ்ட பரிவார கோயில்
4. செய்வித்து உடையார் சோழப் பெருமானடிகள் ஸ்ரீ பராந்தகன் தேவர்க்கு இளங்கோளவ
5. ன் குணவன் அபராஜிதன் விண்ணப்பம் செய்ய...

முதலாம் பராந்தகச் சோழனின் 28ஆம் ஆட்சி ஆண்டில் உறுமூர் (எறும்பூர்) சிறுத் திருக்கோயில் பெருமானடிகளுக்கு இளங்கோவன் குணவன் அபராஜிதன் என்பான் ஸ்ரீ விமானம் கற்றளியாக எடுப்பித்ததையும், எட்டு பரிவாரக் கோயில்கள் அமைத்ததையும் மேலே காணப்படும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. எட்டு பரிவாரத் தெய்வங்களான சூரியன், சப்தமாதர்கள், கணபதி, முருகன், ஜேஷ்டாதேவி, சந்திரன், சண்டேசுவரர், பைரவர். எனவே எறும்பூரிலும் சப்த மாதர்களுக்குக் கோயில் இருந்தமை தெரியவருகிறது.

சென்னையை அடுத்துள்ள வேளச்சேரியில் இன்றும் சப்தமார்களுக்கென ஒரு தனிக்கோயில் உள்ளது.இது செல்லியம்மன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் தெற்குப் பக்கச் சுவரில் பார்த்தி வேந்திராபதிவர்மனின் பத்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் சோழ நாட்டு மல்ல நாட்டிலுள்ள திருவெட்பூரைச் சேர்ந்த திருவெட்பூருடையான் தேவடிகள் சப்தமாதரிகளுக்காக நிலக்கொடை அளித்தது குறிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்நிலக் கொடை "மாத்ரு சிவர்" என்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறுகிறது அக்கல்வெட்டு.

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பபார்த்தி வேந்த்ராதிபதி பன்மற்குயாண்டு பத்தாவது புலீயூ.
2. ர் கோட்டத்து வேளச்சேரி மஹா ஸபையோம் எம்மூர் சப்தமாத்ரிகரு.
3. க்குச் சோழநாட்டு மழநாட்டுத் திருவெட்பூர்த் திருவெட்பூருடையான் தேவடி.
4. கள் அர்த்தசந்த்ர காலமுநிச்ச. படி வைத்த திருவமிர்து ஒன்று இதனுக்கு இவ.
5. ன் விலைகொண்டு வைத்து பூமி இவ்வூர்த் தென் கழனிப் பூதி பாக்கள்
6. தடி நாவினாலுரிய கணிற்றுழி இரண்டேற்றிக் குழி ஐஞ்ஞாற்று.
7. முப்பத்தொன்றவரையே.. காணியாலும் எப்பேர்ப்பட்ட இறையும்
8. ஒழியப் பணித்து இறை இழிச்சுக் குடுத்தோம் மஹா ஸபை யோம்.
9. இ பூமி நாங்களே கொண்டு நிசதம் ஒரு திருவமிர்து செய்விக்க கடவோம் இ ஸ்ரீ கோ.
10. யிலுடைய மாத்ருசிவரோம் – டைக்குட்டி வேட்டுவிச்சார் கரியபட்டி

என்று எழுதப்பட்டுள்ளது.

**இலக்கியங்களில் தாய்மார் எழுவர்**

தமிழிலக்கியங்களில் முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் சப்தமாதர்கள் குறிக்கப்படுகின்றனர். அன்னை பராசக்தியைக் குறிக்குமிடத்தில், இளங்கோவடிகள்,

"அறுவர்க்கிளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, நாருகன்
பேருரங் கழித்த பெண்"

என்று வருணிக்கிறார்.

முதலாம் குலோத்துங்கச் சோழனின் கலிங்கப் போரைப் பரணியாகப் பாடிய சயங்கொண்டார், கடவுள் வாழ்த்துப் பகுதியில் தாய்மார் எழுவரையும் அவர்களது கொடிகளுடன் குறிப்பிடுகிறார்,

"மேதி புள்ளலகை தோகை யேறுவனம்
வேழம் என்ற கொடி ஏழுடைச்
சோதி மென்கொடிகள் ஏழின் ஏழிருது
ணைப் பதந் தொழ நினைத்துமே"

என்பதாக.

திருமூலரின் திருமந்திரம் கன்னிமார் எண்மர் என்று குறிப்பிடுகிறது.

"பூ ரித்த பூ விதழ் எட்டினுக் குள்ளேயோர்
ஆரியத் தாளுண்டங்கு எண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சக்தியைத் தாங்கள் கண்டாரே"

"இருந்தனர் சக்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் குழு எதிர்ச் சக்கரத்தே
இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே"

என்னும் பாடல் வரிகளில் காணலாம்.

சப்த மாதர்களில் ஒருவராகிய வாராகியைப் பற்றி,

"ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுவடை ஏந்திய வெண்ணகை
ஊனம் அறவுணர்ந் தாருவத் தோங்குமே"

என்றும் திருமந்திரம் தெரிவிக்கிறது.

கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தர், சக்தி வழிபாட்டை மையமாக வைத்தே தம் தக்கயாகப் பரணியைப் பாடினாரென்பர். அத் தக்க யாகப் பரணியில் தாய்மார் எழுவரையும்,

"எறிவடை விசயை
யிசைகெழு தெய்வமகளிர்
எழுவரும் வெள்ளை முளரி
யினிதுறை செல்வ மகளும்
மறிகடல் வையமகளு
மலர்கெழு செய்ய திருவும்
வரவிரு மெல்லவுரகன்

மணியணி பள்ளியருகே"

என்று கூறிச் செல்கிறார்.

திருவிளையாடற் புராணம், திருநகரங்கண்ட படலத்தில் பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் சப்த மாதாக்களை மதுரையில் தெற்குத் திசையில் காவல் தெய்வமாகப் பிரதிட்டை செய்து வைத்தது கீழ்க்காணுமாறு குறிக்கப்பட்டுள்ளது.

"பார் சொக்கநாதனுரைப்படி கீழ்த்திசை பாங்கரரி
அரபுத்திரன் சப்தமாதாக்கள் தென்திசையக் குடபாற்
கருணைப் புயலுத்தரங்காளி கூடலைக் காத்தளிக்கப்
பாரினிற் பிரதிட்டை செய்தான் குலசேகரப் பாண்டியனே"

இதே செய்தி பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திலும், திருநகரங்கண்ட படலத்தில்,

"கீட்டிசைக்கரிய சாத்தனும் தென்சார் கீற்று வெண்பிறைநுதற்களிற்றுக்
கோட்டிளங் களபக் கொங்கை யன்னையரும் குடவயின் மதுமடை யுடைக்கும்
தோட்டிவந் தண்ணந்துழாயணி மௌலித் தோன்றலும் வடவயிற் றோடு
நீட்டிரும் போந்தினிமிர் குழவெண்டோனீலியுங் காவலா நிறுவி"

என்று கூறப்பட்டிருக்கிறது.

**சமணமதத்தில் சப்தமாதர் :**

கந்தகிரி மலையிலுள்ள சத்கர குகையில் தாய்மார் எழுவர் உருவங்கள் சமண மதத்தின் அடிப்படையில் வழிபடப்படுகின்றன. இவ்வுருவங்களில் சில பத்துக் கைகளோடும் சில நான்கு கரங்களோடும் காணப்படுகின்றன. முதல் ஐந்து உருவங்களும் அவை தரித்துள்ள படைக்கலன்களின் அடிப்படையில், பிராமணி, வைஷ்ணவி, இந்திராணி, மாஹேஸ்வரி, கௌமாரி ஆகிய உருவங்களை நிலைவுட்டுகின்றன. ஆறாம் உருவமும் ஏழாம் உருவமும் சமண மதச் சார்புடைய பத்மாவதி, அம்பிகை ஆகிய உருவங்களாக இருக்கலாம் போன்று தெரிகிறது. இவைகளில் மூன்று, ஐந்து, ஏழாம் உருவங்கள் கைகளில் குழந்தையை ஏந்தியுள்ளன. இவற்றில் ஐந்தாம் உருவத்தைத் தவிர மற்றவற்றை சமய மத அடிப்படையில் சக்ரேஸ்வரி, அஜிதாதேவி, துரிதாரி அல்லது ப்ரஞாப்தி, கௌரி அல்லது மானவா, பத்மாவதி, அம்பிகா என்று கூறுகின்றனர்.

# கொஞ்சம் தெரிந்து கொள்வோம்

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்துக்கள்!

முதலாம் தவணைப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்கிறீர்களா? விளையாட்டுப் போட்டியெல்லாம் நன்றாக நடந்தது... சரி, ஆங்கிலத்தில் உயர்கல்வி, உடற்பயிற்சியில் சிறந்த வீரர் என்றெல்லாம் வளர்ந்து, இளமையில் எல்லாம் துறந்து சாதுவான ஒருவரைப்பற்றி இப்போது தெரிந்துகொள்ளுங்கள். யாழ்ப்பாணத்தின் கடந்தகால வரலாற்றில் மிகப்பெரிய நன்மைகளை விளைத்தவர்களில் ஒருவர் அவர்.

தமிழ்நாட்டிலே பத்தமடை என்ற ஒரு கிராமம். பட்டாசுத் தொழிற்சாலைகள் நிறைந்த தென்காசிக்கு அருகே உள்ளது பத்தமடை. ஆங்கே ஒரு அந்தணச் சிறுவன் பெயர் குப்புஸ்வாமி. சிறுவன் நன்கு படித்து, லண்டன் சென்று டொக்டருக்கான உயர்கல்வியைப் பெற்றான். அக்காலத்தில் தென்னிந்தியரும், யாழ் மக்களும் மலேசியாவில் நிறையக் குடியேறி இருந்தனர். இறப்பர் தோட்டங்களில் தமிழர் கள் தான் அதிக பணி செய்தனர். மலேசியாவின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அத்திவாரமாய் இருந்த அவர்களிடையே தான் பணிபுரிய வேண்டும் என்ற ஆசையில் மலேசியா சென்றார் Dr. குப்புஸ்வாமி. சில வருடங்கள் நல்லபடி மகிழ்வுடன் தொழில் செய்தார். அக்காலத்தில் இரண்டாவது உலகப்போர் மூண்டது. மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகள் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டன. எங்கும் குண்டுவீச்சுக்களின் அதிர்வு, மரணம், சிதைவு, ஓலம்... இவற்றிற்கிடையே பணிபுரிந்த குப்புஸ்வாமிக்கு மனதில் பெரும் வேதனையும் விரக்தியும் ஏற்பட்டன. தமது வைத்தியத் தொழில், வீடு, வைத்தியசாலை எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒருநாள் தமிழ்நாட்டிற்குத் தப்பி வந்துவிட்டடார். வந்தவருக்கு தமது சொந்த ஊருக்குப் போக மனமில்லை. எங்காவது பரதேசியாகப் போய்விடவேண்டும். ஊர்சுற்றவேண்டும். மன அமைதியைத் தேடவேண்டும் என்று நினைத்தார்.

இராமேஸ்வரத்திலிருந்து டெல்லி செல்லும் இரயிலில் ஏறியிருந்துவிட்டார். ரயில் ஓடிக்கொண்டிருந்தது. குப்புஸ்வாமி தமது சிந்தனைகளின் பின்னால் ஓடியபடி ஒரு ஓரத்தில் பாமரனாக உட்கார்ந்திருந்தார். வடநாட்டிலிருந்து இராமேஸ்வர யாத்திரை வந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு வடநாட்டு மனிதர் குப்புஸ்வாமியைக் கவனித்தார். நல்ல கட்டமைப்பான உடல், சிவந்த நெடிய மேனி, ஒளிவீசும் கண்கள். ஒரு பிராமணருக்குரிய அமைதியான சுபாவம்... அவர் குப்புஸ்வாமியிடம்

பேசத்தொடங்கினார். ஆனால் இவர் தான் ஒரு ஏழை, வடநாட்டில் போய் ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமென போகிறேனெனச் சுருக்கமாகச் சொன்னார்.

"என்ன வேலை செய்வீர்?" என்று கேட்டார் வடநாட்டவர். "என்ன வேலை சொன்னாலும் செய்வேன்" என்றார் இவர். இடைக்கிடையே தமது வேலைக்காரனைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார். பகல் முழுதும், ஓயாத வேலை. ஆனால் இரவில் நடு இரவுக்குப் பிறகு தமது தன்னிடத்தில் ஆழ்ந்த தியானம்.... அட... ஆங்கிலப் புத்தகம் எல்லாம் கூட வாசிக்கிறானே. அவர் ஒரு தோழனைப்போல குப்புஸ்வாமியிடம் பழகத் தொடங்கி, மெல்ல மெல்ல இவன் சாதாரண பாமரத் தமிழன் அல்ல.... ஆன்மீக நாட்டம் கொண்ட ஒரு அறிவு ஜீவி என்பதை விளங்கிக்கொண்டார். ஒரு நாள் காலில் விழாத குறையாக மன்னிப்புக் கேட்டு, "ஐயா! உங்களை நடத்திய விதத்திற்காக வெட்கப்படுகிறேன். தயவு செய்து நீங்கள் இனிச் சுதந்திரமாக எங்கும் போகலாம்" எனச் சொல்லிவிட்டார்.

குப்புஸ்வாமி ரிஷிகேசம் என்ற இடத்திற்குப் போனவர் இமயமலையின் அடிவாரத்தில் உள்ள இடம் ரிஷிகேஷ். கைலாய (நடை) யாத்திரை தொடங்குவது இங்கே இருந்துதான். இந்தியாவின் புகழ்பெற்ற பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பிறந்த இடம். அக்காலத்தில் சிறு கிராமம், சில கடைகள். அங்கே சென்ற குப்புஸ்வாமி அவர்கள் ஒரு மண் குடிசையமைத்து அங்கிருந்து தவம் செய்தார். கால்நடையில் அவர் சித்திகள் பெற்று உயர் துறவுநிலை அடைந்தார். ரிஷிகேசத்தின் ஒரு ஆங்கிலம் பேசும் துறவி! யாத்திரிகர்கள் அவரின் மகிமையை அறிந்து போற்றினார்கள். தாங்கள் போகுமிடமெல்லாம் அவர் பெருமையைச் சொன்னார்கள்.

ஆன்மீக தாகம்படைத்த பன்னாட்டு அறிஞர்கள் ரிஷிகேசத்திற்குச்சென்றார்கள். சிவானந்தா என்ற அந்த ஆங்கிலம் பேசும், மருத்துவ அறிஞரான துறவியின் காலடியில் சரணடைந்தார்கள். துறவியர் கூட்டம் பெருகியது. ரிஷிகேசம் வளர்ந்தது. ஆன்மீக வேதாந்த பல்கலைக்கழகம், மிகப்பெரிய நவீன மருத்துவமனையெல்லாம் வளர்ந்து மிகப்பெரிய சேவை விரிந்தது.

"இமயசோதி" என்று அந்தத் துறவி அனைவராலும் வணங்கப்பட்டார், பின்பற்றப்பட்டார்.

அவர் இலங்கைக்கு ஒரு முறை வந்து ஆசி கூறிச்சென்றார். அவரது சீடர் சிலர் இங்கே வந்து நல்லபல ஆன்மீக அறிவுப்பணி செய்துள்ளனர்.

திருகோணமலையில் சிவானந்த மாதாஜி, கண்டியில் சுவாமி சற்குரு

சச்சிதானந்த மகாராஜ் போன்றவர்கள் ஆச்சிரமங்கள் அமைத்து மக்கட் பணிசெய்தனர். யாழ்ப்பாணத்திற்கு சுவாமியின் சீடர் பலர் வந்து சென்றுள்ளனர். "திவ்விய ஜீவனசங்கம்" என்ற அமைப்பை உருவாக்கிய சுவாமியின் சீடர்கள் பற்பல பணிகளைச் செய்தனர். இப்போது அந்த நல்ல செயல்களும் நல்ல வழிகளும் மறக்கப்பட்டு வருகின்றன.

"சேவை செய்"!

"அன்பு கொள்" என்பது சுவாமி சிவானந்தரின் உபதேசம்.

"கொஞ்சம் வேலைசெய்,

கொஞ்சம் சாப்பிடு!

கொஞ்சம் சேவை செய்.

கொஞ்சம் கும்பிடு என்பது போன்ற எளிமையான மொழிகள் அவருடையவை. அவரைப்பற்றி அறிந்துகொள்வது நல்லது. அவர் சொன்னபடி நடப்பது அதனினும் நல்லது.

# இதய அஞ்சலி






**ஆன்மீகப் பெரியவர்**
**திருக்கோணமலை**
**திரு. பொன்னம்பலம் கந்தையா**
**(காந்தி ஐயா) அவர்கட்கு**
**எமது இதய அஞ்சலி**

**நிர்வாகசபை**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*

# ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் தென்திசை வாயில் கோபுர கும்பாபிஷேக காட்சிகள் : 9-02-2017




# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# தென்திசை வாயில் கோபுர கும்பாபிஷேகம்



Print Master. T.P. 021-205 3322